உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

..டர் 19 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 15 திங்கட்கிழமை (01-12-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:05

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவில்

# ..சங்கரியின் தலைமைக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

### ..முகமளித்திருந்த 37 பேரில் 25 பேர் ஆதரவு தெரிவிப்பு

கொழும்பு,டிசெம்பர்1

**..தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டத்தில் கட்சியின் ..லைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறை ..வேற்றப்பட்டிருப்பதாக கட்சியின் செயலாளர் நாயகமும் ஏனைய சிரேஷ்ட ..தலைவர்களும் அறிவித்திருக்கின்றனர்.**

**நேற்றுக் கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பணிமனையில் ..நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட 37 ..பேரில் 25 பேர் இத்தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்து அது தொடர் ..பான ஆவணத்தில் கையொப்பமிட்டிருக்கின்றனர் என்றும் கூட்டணித் தலை ..வர்கள் தெரிவித்துள்ளனர்.**

கூட்டணியின் மத்தியகுழுவின் ..கூட்டம் நேற்றுக்காலை 10 மணிக் ..குத் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் ..தலைமையில் ஆரம்பமானது.

மத்தியகுழு உறுப்பினர்களைத் தவிர வேறு வெளியாள்களை கூட் டம் நடைபெறும் பகுதிக்கு அனுமதிக் கக்கூடாது என்ற முடிவுக்கு அமைய கூட்டம் நடைபெற்ற மண்டபத்துக்கு வெளியாள்கள் செல்வது தவிர்க்கப் பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டணி அலுவலக வாசலில் கூட்டம் முடிந்ததும் குழப்பம்

கொழும்பு,டிசெ.1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நேற்றைய செயற்குழுக் கூட்டம் நிறை வடைந்த பின்னர், கட்சி அலுவலகத் துக்கு வெளியே ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடை யில் முறுகல் நிலை ஏற்பட்டது. ஓரிரு வர் தாக்கப்பட்டனர்.

கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி யின் ஆதரவாளர்கள் சிலர், ரவிராஜ் எம்.பி.யையும் வேறு சிலரையும் முஷ் டியை முறுக்கிக் கொண்டு தாக்கு வதற்குப் பாய்ந்தனர்.

உடனே, ரவிராஜ் எம்.பியின் மெய்ப் பாதுகாவலர்கள் அவரைப் பாதுகாப் பாக அழைத்துச் சென்று அவரது வாக னத்தினுள் ஏற்றினர். இவ்வளவு பாது காப்பையும் மீறிப் பாய்ந்து சென்ற யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் அரவிந்தன் தலைமையி லான கோஷ்டியினர், ரவிராஜ் எம். பி.யை வாகனத்துக்கு வெளியே இழுக் கவும் முற்பட்டனர்.

ஆனந்தசங்கரி எம்.பி.யினால் ச. தொ.சவில் அண்மையில் நியமனம் பெற்றுக்கொடுக்கப்பட்ட திவாகர் மற் றும் மதி, முன்னாள் மாநகர சபை உறுப்பினர் அரவிந்தன், தாம் யாழ். மாநகர மேயராக இருந்த சமயம் அர

(16ஆம் பக்கம் பார்க்க)



### சங்கரியின் தலைமைப் பதவிக்கு உடனடி ஆபத்து எதுவுமில்லை?

கொழும்பு,டிசெ.1

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எதி ராக மத்திய குழுவில் கொண்டுவரப் பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுவிட்டதாகக் கருதப் பட்டாலும் கூட, அதனால் அவரின் தலைமைப் பதவிக்கு இன்னும் முழு மையாக ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்று அர்த்தம் அல்ல - இப்படி கூட்ட ணியின் தொடர்புடைய சட்டவட்டாரங் கள் சில தெரிவித்தன.

அவை தெரிவித்த மேலும் சில தகவல்கள் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரை அதன் யாப்புப்படி கட்சி யின் தலைவரையோ அல்லதுவேறு பொறுப்புள்ள நிர்வாகிகளையோ அல் லது உறுப்பினர்களையோ கட்சி யின் பொதுக் குழுவே ஒழுங்கு நடவ டிக்கை எடுத்து வெளியேற்றமுடியும்.

எவரேனும் உறுப்பினருக்கு எதி ராக முறைப்பாடு ஒன்று கிடைக்கு மானால் அதைக் கட்சியின் செயலா ளர் நாயகம் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்குப் பாரதீனப்படுத்த வேண் டும். ஒழுங்கு நடவடிக்கைக் குழு அதனை விசாரித்து உரிய சிபார்சு களைப் பொதுச் சபைக்கு வழங்கும், அதனடிப்படையிலேயே பொதுக்குழு அந்த உறுப்பினர் தொடர்பான நடவ டிக்கையை எடுக்கமுடியும்.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட் டணியின் பொதுக்குழு, 1983 இற்குப் பின்னர் கூடவேயில்லை. கிளைக்குழுக்

(16ஆம் பக்கம் பார்க்க)



**அரவிந்தன் தலைமையிலான கோஷ்டியினரிடமிருந்து ரவிராஜ் எம்.பியைப் பாதுகாத்து அவரை வாகனத்துக்குள் ஏற்றுவதற்கு பொலிஸார் முயற்சிப் பதையும், ரவிராஜின் வாகனச் சாரதி முன்னெச்சரிக்கையாக கைத்துப் பாக்கியை ஆயத்தமாக வைத்திருப்பதையும் வாகனத்தை மறித்து ஆதர வாளர்கள் திரண்டிருப்பதையும் படங்களில் காணலாம்.**

### ..வாக்கெடுப்பு நடப்பதற்கு முன்னரே கூட்டம் ..ஒத்திவைக்கப்பட்டுவிட்டது என்கிறார் சங்கரி

**..பொதுச்சபையே தன்னைப் பதவி விலக்க முடியும் என்றும் கூறுகிறார்**

கொழும்பு,டிசெ.1

..தமிழர் விடுதலைக் கூட்டணித் ..தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு எதிராக ..கட்சியின் மத்திய குழுக் கூட்டத் ..தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ..கொண்டு வரப்பட்டு அது நேற்றைய ..கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதாகக் கூட்டணியின் மூத்த தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை மீது வாக்கெடுப்புக்கு விடப்படும் முன்னரே தான் - நேற்றைய - கூட்டத்தை ஒத்தி வைத்து விட்டதாக தலைவர் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

கட்சி உறுப்பினர் மீது நடவ டிக்கை எடுப்பதற்கு பொதுக் குழு விற்கே அதிகாரம் உண்டு. மத்திய செயற்குழுவுக்கு இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வான் விபத்து!

கொழும்பு,டிசெ.1

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த வானொன்று முந்தல் பகுதியில் மரமொன்றுடன் மோதி விபத் துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த ஐவர் படுகாயமடைந்தனர்; இரு வர் ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை முந்தல் - கொழும்பு பிரதான வீதி யில் இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாக வந்த வான், கட்டுப் பாட்டை இழந்து மரமொன்றுடன் மோதியுள்ளது என்றும் -

சாரதியின் கவனக் குறைவின் கார ணமாகவே இந்த விபத்து நிகழ்ந்துள் ளது என்றும் பொலீஸார் தெரிவித்த னர். (ஐ)

அவசரமாக காசு தேவைப்படுகின்றதா ?

இப்போது தேசிய சேமிப்பு வங்கியின் ரன் சஹன அடகுச்சேவை



NSB தேசிய சேமிப்பு வங்கி

- ஒரு தங்க சவரனுக்கு கூடுதலான பணம்
- தவணை அடிப்படையில் திரும்ப செலுத்தும் வசதி
- இரகசியம் பேணல் மற்றும் துரித சேவை
- வருடாந்தம் 16% குறைந்த வட்டி
- கணனி மூலம் பரிசோதனை

NSB

தேசிய சேமிப்பு வங்கியின் தங்கமான சலுகை

# சிங்களத் தலைமைக்கு இது இறுதிச் சந்தர்ப்பம்

## ஜோசப் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு,டிசெ.1

தற்சமயம் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலை சிங்களத்தலைமைக்கு வழங்கப்பட்டுள்ள இறுதிச் சந்தர்ப்பம் என்பதை தலைவர் பிரபாவின் உரை எடுத்துக் காட்டியுள்ளது. சிங்களத் தலைமை தீர்வுக்குத்தயார் இல்லையாயின் தமிழ் மக்கள் பிரிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற செய்தி சிங்கள மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலை சிங்களத் தலைமைகள் கடந்த காலங்களில் தமிழ்மக்கள்ள ஏமாற்றி வந்த வரலாற்றையே மீண்டும் எடுத்துக் காட்டுகின்றது. ஆயுதப் போராட்டத்தை நடத்தி வந்த விடுதலைப் புலிகள் இன்று சமாதானம் மூலம் தீர்வை எட்ட ஆர்வமாக இருக்கின்றனர் என்ற செய்தியும் தலைவரின் உரை மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழீழத்துக்காகப் போராடி வந்த விடுதலைப் புலிகள் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றுக்கு முன்வந்துள்ளதை சிங்களத் தலைமைகள் ஏற்க மறுப்பது, நாடு பிரிவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே காட்டுகின்றது.

சமாதானத்தில் தாங்கள் உறுதியாக இருப்பதையும் பேச்சு மூலம் தீர்வு காண்பதில் உள்ள உறுதிப்பாட்டையும் விடுதலைப் புலிகள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்கியுள்ளனர் - என்றார் பரராஜசிங்கம்.(ஐ-3)

# தனித்திருந்த குடும்பப் பெண் மீது சீருடையில் வந்த நபர் சேஷ்டை!

வடமராட்சி,டிசெ.1

சீருடையினர் ஒருவர் அதிகாலை வேளையில் வீட்டு வாசலில் நின்று சேஷ்டை புரிய முயற்சித்தார் என்று குடும்பப்பெண் ஒருவர் கடற்புலிகளின் அரசியல் துறையினரிடம் முறையிட்டுள்ளார்.

குடத்தனை பொற்பதி கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே வல்வெட்டித் துறைப் பணிமனையில் முறையிட்டுள்ளார்.

தனது கணவர் இரவு கடற்றொழிலுக்காகச் சென்றிருந்ததாகவும் - அன்று காலை 6.30 மணியளவில் உறக்கத்திலிருந்து எழுந்து வீட்டுக்கு வெளியே வந்த போது வீட்டு வாசலில் நின்ற ஒருவர் தன்னுடன் தகாத முறையில் நடக்க முயற்சித்ததாகவும், அவ்வேளை தான் அபயக்குரல் எழுப்பவே அவர் ஓடித் தப்பிவிட்டதாகவும் பிரஸ்தாப பெண் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக குடத்தனைப் பகுதிக்கான படைமுகாமில் முறையிட்ட போது அங்கிருந்த அதிகாரி ஒருவர் உங்களிலும் சிலர் இப்படி இருக்கின்றார்கள். அதேபோல எங்களிலும் சிலர் இருக்கிறார்கள். ஆகவே, இதனை பெரிதுபடுத்தவேண்டாம் என்று கூறியதாகவும் அப்பெண்மணி தெரிவித்துள்ளார்.

## அம்புலன்ஸ் ப[illegible]து வெள்ளோட்ட[illegible]

தீவகத்தில் சேவையில் ஈடு[illegible] அம்புலன்ஸ் படகின் வெள்ளோட்டம் இன்று ஊர்காவற்றுறைத் துறைமுகத்தில் இடம்பெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் 50 லட்சம் ரூபா நிதி உதவியுடன் இப்படகு புனரமைக்கப்பட்டது. இது இன்று சுகாதாரத்திணைக்களத்தினரிடம் சம்[illegible] பூர்வமாக கையளிக்கப்படவுள்ளது. (ஐ-173)

# ஜனாதிபதி – பிரதமர் இடையேயான இணக்க முயற்சி பிணக்கில் முடிவு?

## மலிக் - தித்தவெல குழு இன்று கூடுவது சந்தேகம்

கொழும்பு,டிசெம்பர்1

**ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அரசியல் சகவாழ்வு தொடர்பாக ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை சுமுகமாகத் தீர்த்துவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள், பிணக்கில் முடிவடைந்திருப்பதாகத் தெரியவருகின்றது.**

**சமரசத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் மலிக் - தித்தவெல குழு இன்று மீண்டும் கூடி ஆராயுமென முன்னர் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது இந்த முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவு நிலையில் இன்றைய கூட்டம் இடம்பெறுவது சந்தேகமே என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பக்கத்திலிருந்து பாதுகாப்புத்துறை உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுக்களை கடந்த மாத முற்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரெனப் பறித்து எடுத்ததை அடுத்து ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையிலான விரிசல் - முறுகல் - நிலை உச்சக்கட்டத்தை அடைந்தது. இதனால் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் சமாதான முயற்சிகளும் பாதிப்புற்று இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில், சமாதான முயற்சிகளைத் தடையின்றி முன்னெடுக்கக் கூடிய வகையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் தெளிவான - அதிகார வரையறைகளுடனான - சமரசத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக நான்கு அதிகாரிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

பிரதமர் தரப்பில் ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமர விக்கிரம தலைமையில் இருவரையும், ஜனாதிபதியின் தரப்பில் ஜனாதிபதியின் அலுவலக பிரதம பணிப்பாளர் தித்தவெல தலைமையில் இருவரையும் கொண்டதாக நியமிக்கப்பட்ட இந்தக் குழு 'மலிக் - தித்தவெல குழு' என்று அழைக்கப்பட்டது.

இந்தக் குழு தனது முயற்சியில் கணிசமான அளவு முன்னேறிய நிலையில் 'சமரசத் தீர்வுக்கான ஜனாதிபதி தரப்பு ஆலோசனைகள்' என்ற பெயரில் ஓர் ஆவணம் திடீரென ஊடகவியலாளர்களுக்கு கடந்த வெள்ளியன்று கசியவிடப்பட்டது.

மலிக் - தித்தவெல குழுவின் சமரச முயற்சிகளுக்குப் புறம்பாக அக்குழுவுக்கே தெரியாமல் திடீரென வெளியிடப்பட்ட இந்த ஆவணத்தினால் மலிக் - தித்தவெல குழுவின் சமரச முயற்சிகள் அடிபட்டுப் போயிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மேற்படி ஆவணத்தில் இருக்கும் யோசனைகளை பிரதமர் தரப்பில் முற்றாக நிராகரித்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

முன்னதாக - மலிக் - தித்தவெல குழு பேச்சுக்கள் மூலம் காணப்பட்ட இணக்கத்தின்படி, சமாதான நடவடிக்கைகளைப் பிரதமர் முன்னெடுத்துச் செல்வதற்காக பாதுகாப்புத்துறையின் குறிப்பிடத்தக்க பொறுப்புக்களை அரசிடம் ஒப்படைக்கவும் ஜனாதிபதி கையேற்ற ஏனைய இரு அமைச்சுக்களை மீள அரசுத் தரப்பிடம் வழங்கவும் இணக்கம் ஏற்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டது.

ஆயினும், கடந்த 28 ஆம் திகதி நடைபெற்ற இக்குழுவின் நான்காவது சுற்றுப் பேச்சுக்களின் போது, முன்னர் காணப்பட்ட சகல இணக்கப்பாடுகளையும் ஜனாதிபதி முற்றாக நிராகரித்துவிட்டார் என அவரது தரப்புப் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

அதுமட்டுமன்றி, மலிக் - தித்தவெல குழுவின் முயற்சிக்குப் புறம்பாக சமரசத் திட்டம் ஒன்று பற்றிய விரைவுகளை ஜனாதிபதி செயலகமே வெள்ளியன்று வெளியிட்டு நிலைமையை மேலும் குழப்புமுறச் செய்ததாக அறிய வந்தது.

மலிக் தித்தவெல குழுவின் இறுதிப் பேச்சுக்கள் இன்று மீண்டும் நடைபெறவிருக்கின்றன. ஆனால், புதிய பிரச்சினை காரணமாக இக்குழு இன்று கூடுவது சந்தேகமானதாகும் என்று அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இக்குழுவின் பேச்சுக்கள் முறிவடையுமேயானால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெறவிருக்கும் முக்கிய சந்திப்பு ரத்தாகலாம் என்று நம்பப்படுகின்றது.

# ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை இன்று நாடு முழுவதிலும் ஆரம்பம்

## 7ஆம் திகதி தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை

ஏறாவூப்,டிசெ.1

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும். எதிர்வரும் 12 ஆம் திகதிவரை பரீட்சை தொடரும்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து 24 ஆயிரத்து 193 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். இதற்கென யாழ். மாவட்டத்தில் 180 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பரீட்சைக்குரிய காகிதாதிகள், வினாத்தாள்கள் என்பன எடுத்துவரப்பட்டுள்ளன - என்று கல்வி வலய வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 846 நிலையங்களில் பரீட்சைகள் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ.ஜே.எம்.விஜயசிறி தெரிவித்தார். கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு இம்முறை 5 லட்சத்து 5 ஆயிரத்து 358 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களில் 3 லட்சத்து 82 ஆயிரத்து 798 பாடசாலை மாணவர்களும், ஒரு லட்சத்து, 22 ஆயிரத்து 560 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர். பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களம் ஏற்கனவே பூர்த்திசெய்துள்ளது.

பரீட்சை மோசடிகளைத் தடுப்பதற்கு இம்முறை தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மோசடிகளில் ஈடுபடும் பரீட்சார்த்திகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தரம் - 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 3 லட்சத்து 10 ஆயிரத்து 942 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவிருந்த இப்பரீட்சை தென்னிலங்கையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பறித்த அமைச்சுக்களுக்கு பிரதியமைச்சர்களை நியமிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை!

## ஊடகச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் மறுப்பு

கொழும்பு,டிசெ.1

பாதுகாப்பு, உள்துறை, மக்கள் தொடர்பாடல் அமைச்சுக்களுக்கு பிரதி அமைச்சர்களை நியமிக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை என்று ஜனாதிபதியின் ஊடகச் செயலாளர் ஜனதாச பீரிஸ் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தாம் பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களுக்கும் பிரதி அமைச்சர்களை நியமிக்கவுள்ளார் என சில ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, எம்.பிக்களான மங்கள சமரவீர, சுசில் பிரேமஜயந்த ஆகியோருக்கு இப்பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

இச்செய்திகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தொலை பேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவரும் இச்செய்தியை மறுத்தார். ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும் ரூபவாஹினித் தலைவருமான ஹரீம் பீரிஸை தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது, ஜனாதிபதிக்கு அவ்வாறான எண்ணங்கள் இல்லை என்று தெரிவித்தார்.

# ஓட்டோ மீது குண்டுத்தாக்குதல்: திருமண வீட்டிலிருந்து வந்த மூவர் பலி!

## எகலியகொட பகுதியில் சம்பவம்

எகலியகொட - பட்டந்தல பகுதியில் முச்சக்கர வண்டியொன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

எட்டியாந்தோட்டைப் பகுதியில் நடைபெற்ற திருமண வைபவமொன்றிற்குச் சென்று திரும்பியோரே இக்குண்டுவீச்சில் கொல்லப்பட்டனர் என்று எகலியகொட பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

திருமண வைபவத்தின்போது இடம்பெற்ற சம்பவமொன்றே இக்குண்டுத்தாக்குதலுக்கு காரணமென தெரிவிக்கப்படுகிறது.

தெஹியோவிட்ட - எகலிய கொட வீதியில் இந்த முச்சக்கர வண்டி வரும்வரை காத்திருந்தவர்களே தாக்குதலை நடத்தியுள்ளனர். நேற்றுமுன்தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக ஒரு நபரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கடற்படையிலிருந்து தப்பி வந்த வீரரொருவர் முச்சக்கரவண்டி மீது குண்டுத்தாக்குதலை நடத்தி விட்டு சென்றுள்ளார் என எகலியகொட பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

## புதுக்கோட்டை அகதி முகாமைச் சேர்ந்த

# 43 இலங்கை அகதிகள் நடுக்கடலில் கைது!

புதுக்கோட்டை,டிசெ.1

புதுக்கோட்டை மாவட்ட அகதிகள் முகாம்களைச் சேர்ந்த அகதிகள் 43 பேருடன் இராமநாதபுரத்தைச் சேர்ந்த அகதிகள் சிலரும் படகு மூலம் இலங்கைக்கு தப்பிச் சென்றனர். புதுக்கோட்டை மாவட்ட கடற்கரை பகுதியிலிருந்து சனிக்கிழமை சென்ற இவர்களை நடுக்கடலில் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தேப்புக் கொல்லை, அழியாநிலை ஆகிய பகுதிகளில் இலங்கை அகதி முகாம்கள் உள்ளன. இவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர். இலங்கையில் அமைதியான சூழ்நிலை நிலவி வருவதால் இந்த முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகள் தங்கள் தாய் நாட்டிற்கு திரும்பிச் செல்ல ஆர்வமாக உள்ளனர்.

# ஸ்பெயினின் உளவுப் படை அதிகாரிகள் ஏழு பேர் ஈராக்கில் சுட்டுக்கொலை!

## சடலங்களை மிதித்து மக்கள் குதூகலம் ஜப்பானியர்கள் மீதும் தாக்குதல்!

பக்தாத்,டிசெம்பர்1

**ஈராக்கில் இடம்பெற்ற இருவேறு தாக்குதல்களில் ஸ்பெயினைச் சேர்ந்த ஏழு உளவுப்படை அதிகாரிகளும், இரண்டு ஜப்பானிய இராஜதந்திரிகளும் கொல்லப்பட்டனர். . மேலும் ஐந்து ஜப்பானியர்கள் படுகாயமடைந்தனர். இரண்டு சம்பவங்களும் இடம்பெற்ற பகுதிகளில் அமெரிக்கப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அங்கு தேடுதல்கள் நடைபெறுகின்றன.**

ஈராக்கின் தென்பகுதி நகரான ஹில்லாவிலிருந்து தலைநகர் பக்தாத் நோக்கி நேற்றுமுன்தினம் மாலை வாகனங்களில் பயணித்துக்கொண்டிருந்த ஸ்பெயின் உளவுப் படை அதிகாரிகளே ஈராக்கிய கெரில்லாக்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவர்கள் பயணித்த மூன்று வாகனங்களையும் திடீரென வழி மறித்த கெரில்லாக்கள் இவர்கள் மீது பயங்கரத் தாக்குதல்கள் நடத்தினர். தாக்குதலில் இவர்கள் பயணித்த வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்தன. அந்த வாகனங்களுக்குள்ளேயே உளவுப் படை அதிகாரிகள் மாண்டனர்.

கொல்லப்பட்டவர்களின் சடலங்களை வாகனங்களின் உள்ளே இருந்து இழுத்து வீதியில் போட்ட கெரில்லாக்கள் அந்தச் சடலங்களைக் காலால் மிதித்தனர்.

இதனை அப்பகுதியிலிருந்த நிருபர் ஒருவர் தத்ரூபமாக வீடியோ எடுத்திருக்கிறார்.

நூற்றுக்கு மேற்பட்ட மக்களும் சடலங்களைக் காலால் மிதித்தனர் என்று அதனை நேரில் பார்த்த 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை நிருபர் ராஜிவ் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் குறித்து அவர் கூறுகையில்:-

ஸ்பெயின் உளவுப் படை அதிகாரிகள் பயணித்த வாகனங்களை கெரில்லாக்களின் இரண்டு கார்கள் பின் தொடர்ந்து வந்தன. சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு வந்ததும் அங்கு பதுங்கியிருந்த கெரில்லாக்கள் தாக்குதல் நடத்தினர். இதனால், உளவுப் படை அதிகாரிகள் பயணித்த வாகனங்கள் வீதியைவிட்டு விலகின.

### உதய அரங்கில்

அந்த வாகனங்களைப் பின் தொடர்ந்து வந்த இரண்டு கார்களிலும் இருந்த கெரில்லாக்கள், ரொக்கெட் மற்றும் கிரனேட்டுக்கள் மூலம் தாக்குதல் நடத்தினர் - என்றார்.

"சம்பவம் இடம்பெற்ற இடத்தை சூழ்ந்துகொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட அப்பகுதி மக்கள் தமது வெற்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் வகையில் சடலங்கள் மீது காலால் மிதித்தனர்" என்று அவர் மேலும் தெரிவித்தார். இச்சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சம்பவம் நடைபெற்ற பகுதிக்கு அமெரிக்கத் துருப்புகள் விரைந்துள்ளன. அங்கு பலத்த பாதுகாப்புக்கள் போடப்பட்டுள்ளன. தொடர் தேடுதல்களும் நடைபெறுகின்றன.

கெரில்லாக்களின் தாக்குதலில் ஐந்து ஸ்பெய்ன் உளவுப்படை அதிகாரிகளே கொல்லப்பட்டனர் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன. ஆனால், ஸ்பெயின் பாதுகாப்பு அமைச்சர் பெட்ரோ ரிலோ ஏழு அதிகாரிகள் கொல்லப்பட்டதை உறுதி செய்தார்.

"ஈராக்கில் தீவிர வாதிகளின் தாக்குதல்கள் மேலோங்கி வருகின்றன. தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த மேலும் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதையே இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது என்று அவர் கூறியுள்ளார்.

கொல்லப்பட்ட அதிகாரிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஸ்பெயினில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஸ்பெயின் பிரதமர் ஜோஸ் மரியா அஸ்னர் தலைநகரில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார்.

1300 ஸ்பெயின் படையினர் ஈராக்கில் தற்போது நிலைகொண்டுள்ளனர். மேலும் 1000 படையினரை அங்கு அனுப்ப ஸ்பெயின் கடந்த வாரம் முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், பக்தாத்திலிருந்து 180 கி.மீ தூரத்தில் உள்ள திக்ரித்தில் முகாம் அமைத்துத் தங்கியிருந்த ஜப்பானிய இராஜதந்திரிகள் மீதும் கெரில்லாக்கள் பயங்கரத் தாக்குதல் நடத்தினர்.

இதில் அந்த முகாமில் இருந்த இருவர் கொல்லப்பட்டனர். மேலும் ஐவர் காயமடைந்தனர். இதனை ஜப்பானிய அரசு உறுதிசெய்துள்ளது.

ஈராக்கில் ஜப்பானிய அதிகாரிகள் கொல்லப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இதனால், எதிர்வரும் ஜனவரி மாதம் ஈராக்கிற்கு படைகளை அனுப்பத் திட்டமிட்டிருந்த ஜப்பான், இச்சம்பவத்தை அடுத்து படை அனுப்புவது குறித்து மீண்டும் ஆலோசித்து வருகிறது.



ஈராக்கில் தாக்குதலுக்குள்ளான ஸ்பெயின் அதிகாரிகள் பயணம் செய்த காரை சோதனை செய்யும் புலனாய்வுப் பணியாளர்

## அமெரிக்கப் படையினரில் மேலும் இருவர் மரணம்!

அமெரிக்கப் படையினர் இருவர் நேற்று ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

ஈராக் - சிரியா எல்லையில் உள்ள ஹுஷாய்பா என்ற இடத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

3ஆவது பீரங்கிப் படையணியைச் சேர்ந்த வீரர்கள் இருவரே கொல்லப்பட்டனர் என்று தலைநகர் பக்தாத்தில் உள்ள அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

ஈராக் எல்லையில் பதுங்கியிருந்த கெரில்லாக்கள், ரொக்கட் மற்றும் கிரனேட்டுக்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அமெரிக்க இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஈராக்கிற்கான திடீர் விஜயத்தை மேற்கொண்டு திரும்பியதையடுத்து அமெரிக்க செனட்டரான முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவி ஹிலாரியும் நேற்றுமுன்தினம் ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

தலைநகர் பக்தாத்தில் ஒரு நாள் தங்கியிருந்த அவர், அமெரிக்கப் படையினரையும், ஈராக் இடைக்கால நிர்வாகக் குழுவினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

"ஈராக்கை நிர்வாகம் செய்ய சர்வதேச நாடுகள் முன்வரவேண்டும். அதே நேரம் ஈராக் மீதான கட்டுப்பாட்டை அமெரிக்கா எந்த அளவில் விட்டுக் கொடுக்கவுள்ளது என்பது குறித்தும் தெளிவுபடுத்தவேண்டும். அமெரிக்க நிர்வாக எண்ணங்களுக்கு ஈராக் பெரிய சவாலாகவே இருக்கிறது. இங்கு சுயநிர்வாகத்தைக் கொண்டு வருவது சவாலானதுதான்."

- இவ்வாறு பக்தாத்தில் வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டியளிக்கும்போது ஹிலாரி தெரிவித்தார். ஈராக்கிற்கு செல்லும் முன் ஆப்கானிஸ்தானுக்குச் சென்ற இவர், அந்நாட்டு ஜனாதிபதி ஹமிட் கர்சேயையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

## குழந்தையை சுட்ட அமெ.படையினர்

பக்காத்,டிச1

ஈராக் தலைநகர் பக்தாத்துக்கு மேற்கே ரமாடி நகரில் விளையாட்டுத் துப்பாக்கியால் சுடுவதாக மிரட்டிய 7வயதுக் குழந்தையை அமெரிக்கப் படையினர் காலில் சுட்டுப் பிடித்தனர்.

ரமாடியில் அமெரிக்க படைகள் வெள்ளிக்கிழமை ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு வீட்டிற்குள் புகுந்தனர்.

அச்சமயத்தில் வீட்டில் இருந்து திடீரென விளையாட்டுத் துப்பாக்கியுடன் 7வயது குழந்தை அமெரிக்கப் படையினரை நோக்கி சுட்டுவிடுவதாக மிரட்டிக்கொண்டு வெளியே வந்தது. இதனைக்கண்டு திடுக்குற்ற அமெரிக்கப்படையினர் குழந்தையின் காலை நோக்கி சுட்டனர்.

காயமடைந்த குழந்தை உடனடியாக பத்தாத் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

## 'அன்டனோவ்' வெடித்துச் சிதறியது! கொங்கோவில் 30 பேர் உயிரிழப்பு!!

கின்ஷாசா,டிசெ.1

கொங்கோவில் பயணிகள் விமானம் ஒன்று விபத்தில் சிக்கியதில் 22 பயணிகள் உட்பட 30 பேர் பலியாகினர்.

தென்பகுதி நகரான போவன்டேயிலிருந்து தலைநகர் கின்ஷாசா நோக்கி வந்துகொண்டிருந்த 'அன்டனோவ்-26' ரக விமானமே விபத்தில் சிக்கியது.

நேற்றுமுன்தினம் நடந்த இச்சம்பவம் குறித்து உடனடி விசாரணைகளை நடத்துமாறு கொங்கோ அரசு உத்தரவிட்டுள்ளது.

'அன்டனோவ்-26' ரக விமானம் கொங்கோவில் விபத்துக்குள்ளானமை இது மூன்றாவது தடவை ஆகும் என்று அந்நாட்டு தகவல்அமைச்சர் விடால் ஹாமேஜ் தெரிவித்துள்ளார்.

நடுவானில் இந்த விமானம் வெடித்துச் சிதறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இயந்திரக் கோளாறு காரணமாகவே விமானம் வெடித்துச் சிதறியிருக்கலாம் என்று கொங்கோ அரசு கூறியுள்ளது.

வெடித்துச் சிதறிய விமானப் பாகங்கள் வீழ்ந்த இடத்தில் அந்த விமானத்தின் கறுப்புப் பெட்டியைத் தேடும் பணி தொடர்ந்தும் நடைபெறுகிறது.

இந்தப்பெட்டி கண்டுபிடிக்கப்பட்டால் விபத்துக்கான காரணம் உடன் தெரியவரும் என்று அந்நாட்டு விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.

அந்நாட்டு இடதுசாரிக் கிளர்ச்சிக் குழுவினரின் தாக்குதல் காரணமாக விமானம் வீழ்ந்திருக்கலாம் என்று அந்நாட்டு தொலைக்காட்சி ஒன்று கூறியுள்ளது.

விமானத்தின் பாகங்கள் வீழ்ந்துள்ள இடத்தில் மீட்புப் படையினர் தேடுதல் நடத்தி வருகின்றனர். இதுவரை கருகிய நிலையில் 18 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.

கடந்த வாரம் அங்கு இடம்பெற்ற படகுகள் விபத்தில் 220 பேர் பலியாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான் திட்டம் தோல்வி!

வடகொரியாவை உளவு பார்க்கவென ஜப்பான் ஏவிய இரண்டு உளவு செயற்கைக்கோள்கள், அவற்றை சுமந்து சென்ற விண்கலத்துடன் சேர்ந்து புறப்பட்ட சில நிமிடங்களிலேயே அழிக்கப்பட்டன.

விண்கலத்தில் இனம் தெரியாத, தொழிநுட்பக்கோளாறு ஏற்பட்டதை அடுத்தே, விண்கலமும் செயற்கைக் கோள்களும் அழிக்கப்பட்டன என்று ஜப்பான் கூறியுள்ளது.

அணுவாயுதத் திட்டத்தில் வடகொரியா ஈடுபட்டுள்ளதாக ஜப்பான் கூறிவருகிறது. எனவே அந்நாட்டை உளவு பார்க்கவென கடந்த மார்ச் மாதம் ஜப்பான் இரண்டு உளவு பார்க்கும் செயற்கைக்கோள்களை ஏவியது. ஆனால் அந்த முயற்சி தோல்வியடைந்தது.

நேற்றுமுன்தினம் மேலும் இரண்டு செயற்கைக்கோள்களை அது ஏவியது. தலைநகர் டோக்கியோவிலிருந்து ஆயிரம் கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஏவுதளத்திலிருந்து இந்த இரண்டு செயற்கைக்கோள்களும் ஏவப்பட்டன.

எச்-2ஏ என்ற விண்கலம் இந்த இரண்டு செயற்கைக்கோள்களையும் சுமந்துசென்றது.

ஆனால், விண்கலம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே செயற்கைக் கோள்களில் ஒன்றில் இனம் தெரியாத தொழினுட்பக்கோளாறு ஏற்பட்டதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர்.

இதனால், விண்கலத்துடன் சேர்த்து செயற்கைக்கோள்களையும் விண்ணிலேயே அழித்துவிட முடிவு செய்யப்பட்டது. இந்த விண்கலத்தில் மனிதர்கள் எவரும் பயணிக்கவில்லை.

செயற்கைக் கோள்கள் திடீரென புறப்பட்ட சில நிமிடங்களிலேயே அழிக்கப்பட்டதற்கான காரணத்தை கூற அந்நாட்டு விண்வெளிக் கட்டுப்பாட்டு நிலையத் தகவல் தொடர்பாளர் ஷோகோ யமமோடா மறுப்புத் தெரிவித்தார்.

இருப்பினும் அந்நாட்டுத் தொலைக்காட்சி ஒன்று விண்கலத்தில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதால் இந்தச் சம்பவம் நடந்ததாக அறிவித்தது.

இதனையடுத்து விண்வெளிக் கட்டுப்பாட்டு நிலையமும் அதனை ஒப்புக்கொண்டிருக்கிறது.

எனினும் விண்கலமும் செயற்கைக் கோள்களும் வெடித்து சிதறியமை பல்வேறு சந்தேகங்களை கிளப்பியிருக்கிறது.

நவீன Digital தொழில்நுட்பத்துடன் Mobital G.S.M. உங்கள் வாசலில்.

யாழ் மக்களுக்கோர் நற்செய்தி.

அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், மற்றும் வங்கியாளருக்கான விசேட பக்கேஜ்களுடன் சலுகை இணைப்புக்கள் செய்து தரப்படும்.

பிரதேச ரீதியாக முகவர்கள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும்.

புதிய பார்வை, புதிய வடிவத்தில்

MOBITAL G.S.M

☆ Sim Card

☆ மேசைத் தொலைபேசி

☆ கையடக்கத் தொலைபேசி

100% Sri Lankan Telecom

இன்னும் பல Mobital இன் சேவைகளுக்கு Mobital நிறுவனத்தின்அங்கீகரிக்கப்பட்ட யாழ். முகவர்

YARL MOBILES

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(குமாரப்பெட்டி சந்தி முன்வீதி) 021-222 5525 / 6887

Mobitel


Authorized Dealer in Jaffna District

மாபெரும் நத்தார், புதுவருட மலிவு விற்பனை
01-12-2003 முதல் 31-12-2003 வரை
நீங்கள் கொள்வனவு செய்யும்
சகல பொருள்களுக்கும்
விசேட கழிவு உண்டு.
இன்றே விரையுங்கள்:
லைட்ன் புடைவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/31627)(26-11-18-25) ☎ 222 2381

விசேட விலைக்கழிவு
குமாரி மோட்டோஸ்
❖ லான்ட் மாஸ்டர் ❖ வாட்டர்பம்
❖ ஜெனரேட்டர் ❖ ஓட்டோ
❖ மீன்பிடி இயந்திர உதிரிப்பாகப் பாவனையாளர்களுக்கும்.
எமது வாடிக்கையாளர்களுக்கும்
விசேட விலைக்கழிவு
01.12.2003 முதல் 31-12-2003 வரை
இல. 281 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணத்தில்
இயங்கும்
எமது நிறுவனத்தின்
20 ஆவது ஆண்டு நிறைவு 10.12.2003 இல் வருகின்ற மையால் இந்த விலைச் சலுகைகளை வழங்குகின் றோம் என்பதை அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடை கிறோம்.
(C/31553)(34-11-18-25) - நிறுவனத்தினர்.

தேவை
இளம்பெண் (30 வயது) ஒருவருக்கு O குறூப் கிட்னி தேவைப்படுகிறது. 45 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் விரும்பத்தக்கது. கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்க.
முதலாம் வட்டாரம்,
சாட்டி,
வேலணை கிழக்கு, வேலணை.
(34-11-18-25) தகவல்: அல்வின் அன்ரன். (25215)

## துயர் பகிர்கின்றோம்



**வஸ்ரியாம்பிள்ளை அல்பிறட**

(தலைவர், ஞானப்பிரகாச சனசமூக நிலையம்)
எமது பாடசாலையில் கல்வி கற்பிக்கும்
**திருமதி ஜெலஸ்ரீனா - றிச்சட் றேமன்**
அவர்களின் தந்தை காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத் துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
(25248) (26-11-18-25) [illegible]

## ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கதிர்காமத்தம்பி சிவநாதன்**
(உரிமையாளர், ராணி பேக்கரி,
ஓராங்கட்டைச் சந்தி, பருத்தித்துறை)

தோற்றம் 09.12.1944 — மறைவு 01.12.1997

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
ஆறவில்லை எம்மனம்
என்டு உமது நினைவுடனே
இப்பூவுலகில் வாழ்கிறோம்.

- நினைந்துருகும்!
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மைத்துனன்.

தேவரன்,
புலோலி தெற்கு, புலோலி. (C/31633)(34-11-18-25)

## கமக்காரர் அமைப்புகள் புனரமைப்பு

வலிகாமம் தெற்கு,டிசெ.1

உடுவில் கமநலசேவை நிலையத் துக்குட்பட்ட கமக்காரர் அமைப்புகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு அமைப்புக்களின் புனரமைப்புக் கூட் டம் இன்று பிற்பகல் 12.30 மணிக்கு முறையே ஏழாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், ஏழாலை தெற்கு சூராவத்தை அம்மன் கோவில் மண்டபம் ஆகியவற்றில் இடம்பெறும்.

ஏழாலை மேற்கு கிராமசேவையா ளர் மண்டபத்தில் ஏழாலை மேற்கு கமக்காரர் அமைப்புக்கான கூட்டம் இன்று காலை 10.30 மணிக்கு நடை பெறும். (ஒ-152)

## வீதியில் குழி பயணிகள் சிரமம்

இணுவில், டிசெ.1

பலாலி வீதியில் உள்ள கோண்டா வில் சந்தியில் பாரிய குழியொன்று காணப்படுகின்றது.

மழைபெய்யும் போது இக்குழி யில் வெள்ளம் தேங்கி நின்று போக்கு வரத்துக்கு பெரும் இடையூறு விளை விக்கின்றது.

இதனால் இப்பிரதான போக்கு வரத்து வீதியில் பயணிக்கின்ற மாணவர்கள், பொதுமக்கள் என அனைவரும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (ஒ-49)

## பயணிகள் தங்குமிடம் மோசமான நிலையில்

தென்மராட்சி, டிசெ.1

கொடிகாமம் பஸ் நிலையத்தில் உள்ள பயணிகள் தங்கும் கொட்ட கைகள் மோசமான நிலையில் உள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழைபெய்யும் வேளையில் இந் தக் கொட்டகைக் கூரைகள் ஒழுகுவ தாகவும் -

இக்கொட்டகைகள் கால்நடை களால் அசுத்தப்படுத்தப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் - தெரிவிக் கப்பட்டது.

ஏ9வீதி போக்குவரத்துக்கு திறக் கப்பட்ட பின்னர் கொடிகாமம் பஸ் நிலையம் கேந்திர நிலையமாக மாறி யுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-117)

## இறுதிப் பரீட்சைக்கு பதிவுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ். செயலகத்திற்கு முன்பாக வுள்ள தகவல் தொழில் நுட்பப் பூங்கா வில் 7 ஆவது பிரிவு சான்றிதழ் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர் களுக்கான பரீட்சைகள் நடைபெற வுள்ளன.

மாணவர்கள் தங்கள் பரீட்சைக் கான பதிவினை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளலாம என தொழில்நுட்பப் பூங்காவின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(எ-7)

## தக்காளி செய்கை பாதிப்பு

வேம்பிராய் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள தக்காளிப் பயிர் கள் தொடர்ந்து பெய்துவரும் மழை யினால் பாதிப்படைந்துள்ளன.

தக்காளிப் பயிர்ச்செய்கை இடம் பெற்றுள்ள நிலங்களில் மழைவெள்ளம் தேங்கி நிற்பதே இதற்குக் காரண மாகும். பெருந்தொகைப் பணத்தை முதலிட்டு தாம் ஆரம்பித்துள்ள தக் காளிப் பயிர்ச்செய்கை எதிர்பார்க்கும வருமானத்தை தராது போய்விடலாம என விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-170)

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து 11 வரை [illegible] ஆரம்பமாகவுள்ளன. மேற்படிப்புவரை Spoken English, Grammar. புதிய பதிவுக்கு:
அதிபர்,
426 (302), K.K.S. வீதி,
யாழ்ப்பாணம். (25270)

மருத்தெண்ணெய்
சில்லாலை டாக்டர்
அலபோன்சஸ்
அத்தனாசியாரின் நேரடிக்
கண்காணிப்பில்
தயாரிக்கப்பெற்ற
மருத்தெண்ணெய் வகைகளை
கீழ்க்காணும் முகவரியில்
பெற்றுக்கொள்ளலாம்.
திருமதி கமிலினி ரஞ்சன்,
இல.22,கலைமனி வீதி,
3.ஆம் கட்டை,
கட்டப்பிராய்.
(25267) (26-11-18-25)

## விழிகளை நிலையோடு என்றும் விரவிவரும் நான்காம் ஆண்டு நினைவலைகள்



அமரர் திருவாட்டி
**தேவராணி சுந்தரலிங்கம்**
திதி: 01.12.2003

முட்டற இல்லறம் முகிழ்த்த நன்முத்தே,
சித்தம் நிறைந்த சேயிழையே!
காலம் கடுகி சென்றாலும் விழிகள் பனிக்கும் ஈரம் காயாது
உள்ளத்தை மாய்க்கிறதே! ஆண்டுகள் பல ஓடலாம்
"மாட்சிமை சேர் என் மனைவியும் மக்களும் நிரம்பினர்"
என்ற பெரும் பேற்றினைத் தந்த பெண்மையின் பேறே!
இணுவை செகராசசேகரனருளும் அன்னையர் சிவகாமசுந்தரி,
கன்னிகா பரமேஸ்வரி அருளொளியும்
இணுவை சேந்தன் முருகனின் நந்தா அருளொளியும்
வட்டுவினி வைரவன் வழங்கும் நற்கருணையும்
எம்மை வாழ்வித்த காலத்தை எண்ணிக் கலங்கும்
எமது இதயத்துக்கு தேனமிர்தம் பொழியும் பொறுமையின் ஒளியே!
உறவுயர் கனைய எமக்களித்த ஆசைக்கொரு மகள்
ஆஸ்திக்கொரு மகன் என்ற தெய்வ தீர்க்க தரிசனம் நகைத்தாயதுதான்!
நாமிருவோரும் வாழ்ந்து சிறந்த இக்கலியின் நிக்கிலம்
கண்ணீர்த் துளிபோல கலங்கிடலாம் கடலலையால்
அலைப் புண்ணவதுபோல எங்கள் இதயங்கள் அலைவதை
கலங்குவதை யாவராலும் தடுக்க முடியாதே!
இறையகம் பற்றிய இல்லத்து மாதரசியே!
அரவடியிருந்து அத்மஞான ஒளி வழியே அமைதி பொழுதியே
ஓம் சாந்தி

"செல்வானந்த வாசா"
இணுவில் மேற்கு,
இணுவில்.

[illegible]

(24927) UTHAYAN Graphics

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்தி அழைப்பும்

**திருமதி பகவதி திசைவீரசிங்கம்**

எங்கள் அன்புத் தாயே! எம்மையீன்ற அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது பாசமிகு அன்னையின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (02.12.2003) செவ்வாய்க்கிழமையும் சபிண்டீகரணக்கிரியைகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பன (03.12.2003) புதன்கிழமையும் நடைபெறவுள்ளதால் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

வெலிசுகன் தோட்டம்
தன்னாலை கிழக்கு, கரவெட்டி

தி.மங்களேஸ்வரி,
தி. அருந்தவச் செல்வி
(பிள்ளைகள்) [illegible]

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நல்லம்மா நடேசன்

(புளியடி வைரவர் கோயிலடி, உடுவில் தெற்கு)

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நல்லம்மா நடேசன் 28-11-2003 வெள்ளிக்கிழமை உடுவிலில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2003) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"லட்சுமிவாசா",
உடுவில் தெற்கு,
சுன்னாகம். (25266) (26-11-18-25)

### கந்தையா நாகமுத்து

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகமுத்து நேற்று (30-11-2003) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார். இவர் இரட்சிப்பின் சத்தம் சுவிசேஷ சபையின் விசுவாசியாவார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும் இராசநாயகம் (அரியாலை), அமரர் இராசரட்ணம் (ஆனைக்கோட்டை), இராசேஸ்வரி (பெரியவிளான்), இந்திராணி (மாகியப்பிட்டி), இராசராணி (ஆசிரியர், இணையதம்பி பாலர் பாடசாலை உடுவில்), இராலட்சுமி (பிர தேசசபை, மானிப்பாய் கிராமசபை ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (01.12.2003) திங் கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத் திற்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இராசநாயகம்
(அரியாலை - மகன்)

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (25264) (26-11-18-25)

உதயன்

## சமரச நிலை ஏற்பட....!

இலங்கை அரசியலில் இப்போது ஒப்பந்தங்கள் குறித்துத்தான் அதிகம் பேசுகின்றனர்.

பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்திய இலங்கை அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்ட போதிலும் கடந்த 21 மாதங்களாக வெற்றிகரமாகத் தாக்குப் பிடித்து வந்துள்ளது. இந்த நிலையில் பிரதமர் ரணில் அரசு கையாண்டு வந்த சில அதிகாரங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீளப்பறித்துக்கொண்டதால் அந்த ஒப்பந்தமும் நெருக்கடிக்கும் கேள்விக்கும் உள்ளாகியிருக்கின்றது.

இதேசமயம் -

ஜனாதிபதியின் அதிகாரப் பறிப்பு நடவடிக்கையால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் முறுகல் நிலையைத் தணிப்பதற்காக ஜனாதிபதி - பிரதமர் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளச் செய்வதற்கு சில முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

அந்த முயற்சி ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் பொ.ஐ. முன்னணி - ஜே.வி.பி. கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வது குறித்துப் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இப்படி பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் குறித்து செய்திகள் வெளியாகும் பின்னணியில் ஏற்கனவே செய்யப்பட்ட சில ஒப்பந்தங்கள், உடன்பாடுகள் மற்றும் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நோக்குவது பொருத்தமானது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரம் தொடர்பில் - இலங்கைத் தரப்பினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் சம்பந்தமாக - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பிரிட்டிஷ் பிரதி அமைச்சர் லியம் பொக்ஸ் முன்னிலையில் செய்துகொள்ளப்பட்ட லியம பொக்ஸ் உடன்படிக்கை கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

தென்னிலங்கையின் இப்போதைய அரசியல் நெருக்கடிக்கு மூலகாரணமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைதான். அதைத்தான் ஆட்சிக்கு வந்து ஒருவருடத்துக்குள் ஒழிப்பேன் என்று 1994 இல் - எழுத்துமூலம் - ஜே.வி.பிக்கு உறுதியளித்ததன் வாயிலாகவே, அத்தேர்தலில் ஜே.வி.பியை போட்டியிடாமல் ஒதுங்கச்செய்து பதவியைக் கைப்பற்றினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. உறுதியளித்து 9 ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த உறுதியில் அளிக்கப்பட்ட ஓராண்டு காலக்கெடு மாத்திரம் இன்னும் முடியவில்லைப் போலும்.

இதேபோன்று முன்னர் ஒருதடவை மக்களின் கருத்தை அறிவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு என்று மக்களுக்கு உறுதியளித்து பிரகடனப்படுத்தினார் இதே ஜனாதிபதி ஆனால், கடைசி நேரத்தில் அதை ரத்துச் செய்தார்.

இவ்வளவுக்கும் ஏன், 1994 இல் ஆட்சிப்பீடமேறிய சந்திரிகா குமாரதுங்க அப்போது புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்து, யுத்தநிறுத்த உடன்பாடு கண்டுதான் சமாதான முயற்சியைகளைத் தொடங்கினார். அந்த ஒப்பந்தம் கூட சில மாதங்களில் முறிந்து போயிற்றே!

இப்படி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை விரைந்து ஒழிப்பேன் என்று அப்பதவியை ஏற்கமுன்னர் பகிரங்கமாகத் தான் வழங்கிய உறுதிமொழி தொடக்கம், அண்மைக்காலத்தில் அவசரகால நிலைமை அமுலுக்கு கொண்டுவர ஏற்பாடு செய்து அது பற்றிய தகவலை கசிய விட்டுவிட்டு இறுதி நேரத்தில் அது தொடர்பான பிரகடனத்தில் கையெழுத்து வைக்காமல் பின்னடித்தது வரை, கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றுவதில் தாம் அரிச்சந்திரன் போன்றவர் என்பதை நிரூபித்து வந்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா! அவரோடு செய்துகொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களே - உடன்பாடுகளே -பெரும்பாலும் காற்றில் பறந்தன என்பது நோக்கப்படவேண்டியது.

அது மட்டுமல்ல, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டு வெற்றிகரமாகத் தாக்குப்பிடித்து வந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கூட, ஜனாதிபதியின் தலையீடு வந்ததும் கேள்விக்குறியாய் நிற்கின்றது.

இப்போதும் கூட, ஜனாதிபதி - பிரதமர் இடையேயான முறுகல் நிலையைத் தணித்து இணக்க நிலையை - அரசியல் சகவாழ்வு சூழ்நிலையை - ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளிடையே ஜனாதிபதி தரப்பிலிருந்து முன்னுக்குப் பின் முரணான உறுதிமொழிகளும், தகவல்களும், முடிவுகளும் வெளியாகிக் குழபபிக்கொண்டிருக்கின்றன என்று சலித்துக் கொள்கின்றார்கள் இடைநடுவில் சமரச முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஏற்பாட்டாளர்கள்.

இத்தகவல்களை சீர்தூக்கிப் பார்க்கும் போது தென்படுவது ஒன்றே ஒன்றுதான். நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதே அது.

ஜனாதிபதி தனது போக்கை மாற்றிக் கொள்வதன் மூலம் மட்டுமே சமரச நிலை ஏற்படுத்துவதற்குத் தோதுவான சூழலை உருவாக்க முடியும்.

# பாலைதீவுக் கடலில் ட்றோலர் மூலம் தொழில் செய்வது முற்றாகத் தடை

## குருநகர் கடற்றொழிலாளர் சங்கம் அறிவிப்பு

குருநகர்,டிசெ.1

பாலைதீவு பள்ளிக்குடா, உள்ளாறு ஆகிய கடற்பகுதிகளில ட்றோலர் பயன்படுத்தி தொழில்செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாக குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் ட்றோலர் உரிமையாளர்களுக்கு பொது அறிவித்தல் மூலம அறிவித்துள்ளது.

பாலைதீவிற்குட்பட்ட கடற்பகுதியில் ட்றோலர் மூலம் மீன் பிடிப்பதனால் சிறுதொழில் செய்வோர் மிகவும் பாதிப்படைவதாகக் கூறி குருநகரைச் சேர்ந்த சிறுதொழிலாளர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்ததுடன் -

அண்மையில் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

இதனை அடுத்து குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம் குருநகர்ப் பகுதி ட்றோலர் உரிமையாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியதுடன், இது விடயமாக உரிய நடவடிக்கை எடுப்பது என்றும் - தீர்மானித்திருந்தது.

மேற்படி பேச்சுக்களின் இறுதியில் பாலைதீவுக் கடற்பரப்பில் ட்றோலர் பயன்படுத்தி தொழில்செய்வதை முற்றாகத் தடைசெய்வது எனத் தீர்மானிக்கப்பட்டதாக - குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் விடுத்த பொது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-51)

# 1000 மொழிமூல ஆசிரியருக்கு மே மாதமளவில் நியமனம்

## ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் போட்டிப் பரீட்சைமூலம் தெரிவுசெய்யப்படும் ஆயிரம் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் மே மாதமளவில் நியமனம் வழங்கப்படவுள்ளது என்று இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் மூன்று வருடங்களாக இழுத்தடிக்கப்பட்ட மேற்படி நியமனங்கள் குறித்து தாம் மனிதவள, கல்வி, அபிவிருத்தி அமைச்சர் சி.கே. நாணயக்காராவுடன் பேச்சு நடத்தியிருந்ததாகவும் -

இதனையடுத்தே நியமனம் தொடர்பான பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்றும் - மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

மேற்படி போட்டிப் பரீட்சைக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். பரீட்சை ஜனவரிமாத பிற்பகுதியில் நடைபெறும்.

போட்டிப் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு ஏப்ரல் மாதமளவில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு மே மாதமளவில் நியமனங்கள் வழங்கப்படும்.

- என்று கல்வி அமைச்சர் தம்மிடம் கூறியதாக ஆசிரியர் சங்கச் செயலாளர் கூறினார். (எ-9)

# இடம்மாற்ற உத்தரவுகள் குறித்து சுகாதாரப் பரிசோதகர் விசனம்

யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடம்மாற்றங்களில் விதிமுறைகள் சீராக பின்பற்றப்பட்டுள்ளனவா என்று சம்பந்தப்பட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சுகாதார பரிசோதகர்கள் சிலருக்கு அடுத்த வருடம் முதல் செயற்படுத்தபபடும்படியான இடம்மாற்ற உத்தரவுக் கடிதங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

நியமனம் பெற்று ஐந்துவருடங்களைக் கூடப்பூர்த்தி செய்யாத சுகாதார பரிசோதகர்களுக்கு இந்த இடம்மாற்ற உத்தரவு மூலம் நீண்டதூரங்களில் கடமையாற்றப் பணிக்கப்பட்டிருப்பதாக சுகாதார பரிசோதகர்கள் கூறுகின்றனர்.

ஒரு புதிய நியமனதாரி முதல் நியமனப் பகுதியில் ஐந்து வருடங்கள் சேவையாற்றுவது கட்டாயமானது. ஆனால், ஐந்து வருட சேவைகளை ஓரிடத்தில் பூர்த்தி செய்யாத சுகாதார பரிசோதகர்களுக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது. அதே வேளை, ஓரிடத்தில் பத்து வருடங்களுக்கும் மேல் கடமையாற்றி வரும் சுகாதாரப் பரிசோதகர்கள இடம்மாற்றப்படவில்லை - எனவும் கூறப்படுகிறது.

### நாளை

கார்த்திகை 16
செவ்வாய்க்கிழமை
(02.12.2003)
திதி : நவமி
பிற்பகல் 4.45 வரை.
நட்சத்திரம் : பூரட்டாதி
பிற்பகல் 4.01 வரை.
சுபநேரம்: 10.45-12.15
ராகுகாலம்: 3.15-4.45
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

குழந்தைக்கு தாய்ப்பால் எப்படியோ அப்படியே தாய்மொழி சமூக வளர்ச்சிக்கு அவசியம்.

# மழையால் நோயாளர் அதிகரிப்பு; வார்ட்டுகளில் இடப்பற்றாக்குறை

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நெருக்கடி

தற்போது பெய்துவரும் மழை காரணமாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் -

இதனால் சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் வார்ட்டுகளில் இடப்பற்றாக்குறை நிலவுவதாகவும் - தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சிப் பகுதியில் கடும் மழை பெய்துவருகின்றது. இதனால், அப்பகுதி நோயாளர்கள் குறிப்பாக ஆஸ்துமா நோயால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை முதல் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் 10 பேர் தவிர்ந்த ஏனையோர் சிகிச்சையளிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். வார்ட்டுகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாகவே இந்த நோயாளர்களை வார்ட்டில் தங்கவைக்க முடியவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

காய்ச்சல் போன்ற நோய்களினால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் வார்ட்டில் இடமின்றி ஆஸ்பத்திரி தாழ்வாரங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் முப்பது கட்டில்களே உள்ளபோதிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் தற்போது இங்கு சிகிச்சைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ-117)

# வரணி வயல்களின் கரையோரம் உவர்நிலங்களாக மாற்றம்

வரணி,டிசெ.1

வரணிப் பகுதியைச் சேர்ந்த மாசேரி, தம்பான் மற்றும் இடைக்குறிச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல்களின் கரையோரப் பகுதி நிலங்கள் உவர்நிலங்களாக மாறியுள்ளன.

இதனால், விவசாயம் செய்யமுடியாத இந்நிலங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளாக தற்போது பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறப்பட்டது.

சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் இவ்வயல் வெளியின் கரையோரமாக உவர்மண் தடுப்பு அணை அமைக்கப்பட்டிருந்ததுடன் மேலதிக மழைநீர் உட்புகாதவாறு மதகுகளும் அமைக்கப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது மதகுகள் பல உடைந்தும் துருசுகள் பலவும் காணாமல் போயும் காணப்படுகின்றன. இதனால் இந்த அணையைச் சுற்றி உட்பகுதியில் பல ஏக்கர் நிலம் சவர் நிலமாக மாறியுள்ளது.

அதேவேளை - மழை வெள்ளம், வெளியிடங்களிலிருந்து வரும் மழைநீர் மேற்படி வயல்நிலங்களுக்குள் உட்புகுவதாலும் முன்பு வயல்களாகப் பயன்படுத்தப்பட்டு வந்த நிலங்கள் ஏக்கர் கணக்கில் உவர்நிலமாக மாறியுள்ளன. (ஏ-170)

# வீதியைத் திருத்தக் கோரிக்கை

தெல்லிப்பழை,டிசெ.1

குப்பிளான் காசிவாசி செந்தில்நாதையர் வீதியைத் திருத்தக்கோரி குப்பிளான் சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய நிர்வாக சபை வலி.தெற்கு பிரதேச செயலருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

குப்பிளான் சந்தியிலிருந்து வடக்கே செல்லும்போது இடப்புறம் முதல்வரும் இவ்வீதி கடந்த காலப் போரின்போது கடுமையாக சேதமுற்றுள்ளது. இவ்வீதி சோதி விநாயகர் ஆலயம் மற்றும் காசிவாசி செந்தில்நாதையர் நினைவு திருவுருவம் என்பவற்றுக்கு செல்லவும் ஆலயத்தை அண்டிய குடியிருப்பு மக்களின் பாவனைக்காகவும் பயன்பட்டு வருகிறது. சேதமடைந்த இந்த வீதியை திருத்தி மக்களின் சிரமங்களை நிவர்த்தி செய்யுமாறு கோரி மேற்படி ஆலய பரிபாலன சபையினரும் பொது மக்களும் வலி.தெற்கு பிரதேச செயலருக்கு பொதுமக்களின் கையொப்பங்கள் இணைக்கப்பட்ட கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர். (ஒ-150)





## யார் இந்த மீனா?

எமது சமூகத்தில் மேற்கொள்ளப்படும் - மீனா பெண்பிள்ளைகளின் நிலையினை மேம்படுத்துவதற்கான நேரடி முயற்சியாகும். இதன் நோக்கம் பிள்ளைகள், வயதுவந்தோர் ஆகியோர் மத்தியில் பெண்பிள்ளைகளின் நிலைமை பற்றி உணர்வூட்டி, கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதாகும்.

மீனா யுனிசெவ் நிறுவனத்தினால் பெண்பிள்ளைகளின் உரிமைகளைப் பரப்ப என உருவாக்கப்பட்ட கதாபாத்திரம். அரசாங்கங்களும் அரசசார்பற்ற நிறுவனங்களும் அவளின் பெற்றோராவர்.

மீனாவின் விவேகமும், உறுதியான மனப்போக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணவகைசெய்கின்றன. வாழ்க்கையில் அவளுக்குள்ள அமோகமான பற்றும் எதிர்காலத்துக்கென அவள் வைத்துள்ள தெளிவான ஆசைகளும் அவளைப் பெண்பிள்ளைகளின் உரிமைகளுக்காக உழைக்கும் போராளியாகவும் தென்னாசியா முழுதுமுள்ள சிறுமிகளுக்கு முன்மாதிரியாகவும் விளங்கச் செய்கின்றன.



அனுசரணை:

unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் 30,
யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-31313) (24-18-31)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16
-
09
-
1912



மறைவு
12
-
12
-
2002

அமரர்

### செல்லத்துரை விசாலாட்சி

திதி: 01-12-2003

***உங்கள் ஆன்மா சாந்தியடைய***
***இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*'நவமதி',*
*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.* (C/31614) (26-24-14-16)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

*பூமித்தாய்*
*மடியில்*
20
-
08
-
1923



*வல்லிபுர*
*மாயவன் அடியில்*
23
-
11
-
2001

### அமரர் முத்தையா சதானந்தன்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், வல்லிபுர ஆழ்வார் ஆலய அறங்காவலர், ஓதுவார்)*

அம்புலி காட்டி அமுதூட்டி அறிவூட்டி
அநுதினமும் எம்மைத் தாலாட்டிப் பாராட்டி
எம்முடனிருந்த ஐயா அம்மையா அப்பப்பா மாமா
எங்கு சென்றனையே எம்மைத் தவிக்கவிட்டு?
எம்பெரு மாயவனின் அடியவராய் தொண்டாற்றி
இருந்தவனைத் தினம்பாடிப் பணிந்தனையே!
நம்பியே தொழுவோர்க்கு அருள்கின்ற வல்லிபுர
நாராயணன் அடி சென்றனையோ?

உனைத்தினம் நினைந்துருகும்:
**மனைவி, மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(C/31617) (26-24-14-16)

## 31ஆம் நாள் நினைவு தினமும்

### ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
27
-
12
-
1914



மறைவு
01
-
11
-
2003

### அமரர் நாகலிங்கம் செல்லையா

(தமிழரசு)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்த உங்களை*
*மறக்கவே முடியாது.*

ஆத்மா சாந்திபெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01.12.2003) திங்கட்கிழமை முற்பகலில் அன்னாரது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்விலும் நண்பகல் நிகழ்கின்ற மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி: **செ.மாசிலாமணி,**
மகள்: **சி.செல்வமணி** *(செல்வி ரீச்சர்)*,
மகன்: **செ.செல்வகுருபரன்,**
மருமகள்: **செ.கௌரி,**
பேரப்பிள்ளைகள்: **செ.விதுசாளினி,**
**செ. விஜந்தன்,**

*தாமரைக்குளத்தடி,*
*துன்னாலை தெற்கு,*
*கரவெட்டி.* (25181) (26-24-14-16)



## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில்

# வழிபடுநர் சபை – 2004

மேற்படி கோயிலுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான வழிபடுநர் சபை உறுப்பினர்களாகச் சேரவிரும்பும் அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை 'பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 2003 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31.12.2003) மாலை 5.00 மணிக்குமுன் கிடைக்கக் கூடியதாக ***''செயலாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு''*** என்ற முகவரியிட்டு கடிதம் மூலம் அனுப்புமாறும் அல்லது கோயில் அறங்காவலர் சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **வழிபடுநர் சபை உறுப்புரிமை விண்ணப்பம்** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**வழிபடுநர்சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:**

1. அ) விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்,
   ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்,
   இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்
   ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதியுடையவர், ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்
2. அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்திய பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின்

   *அல்லது*

   ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட எந்த ஒரு விசேட நைமித்திய உற்சவபூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய, விசேட, நைமித்திய பூசைகள், திருவிழாக்கள் மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ, வகுப்பினராலோ செய்யப்படின் உறுப்புரிமை 2(அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/=) செலுத்தலாம். அத்தகைமை அற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) இன்படி.

   இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா 50/= (ஐம்பது) ***'பொருளாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு'*** என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும். அத்துடன், எப்பொழுதாவது ஒழுக்கக்கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும் இக்கோயிலில் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக்கோயிலில் இலாபகரமான எவ்வித வேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

*குறிப்பு:* விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதிவான், இந்துமதகுரு, இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர் அல்லது அரசாங்க பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றப்பர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ரூபா 5/- செலுத்தி உரிய விண்ணப்பப்படிவத்தை கோயில் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னையின் சேவையில்
**கு.சரவணபவானந்தன் J.P.**
கௌரவ செயலாளர், அறங்காவலர்சபை,
நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

(சி-31571) (26-14-24)
30.11.2003

# பணிநிலை வேண்டுகை

யாழ். மாவட்ட வருவாய்ப்பகுதி ஆளுகையிலுள்ள சந்தைகளுக்கு கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. வேண்டுகையரின் தன்வரலாறு (சுயவிவரம்) அடங்கிய விளக்கங்களை 2003.12.08 ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

**பணிநிலைகள்**

01. வரி அறவீட்டாளர்.
02. எழுதுநர்.

**தகைமைகள்**

பணிநிலை - 01

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரண தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை.

பணிநிலை - 02

01. க.பொ.த. உயர்தரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 - 40 வரை.

*வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:*
அலுவலர்,
*மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,*
*வருவாய்ப்பகுதிச் செயலகம்,*
கிளிநொச்சி.

*நேர்முகத்தேர்வு நடைபெறும்.*
நாள்: 2003.12.11
நேரம்: காலை 09.00 மணி.
இடம்: *வருவாய்ப்பகுதிச் செயலகம்,*
யாழ்சாலை, பளை.

குறிப்பு:

01. நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.
02. நேர்முகத்தேர்வுக்கு ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

**ஆளுகை,**
**மனிதவள மேம்பாட்டுப்பிரிவு,**
**வருவாய்ப்பகுதி.**

(34-20-14-10)

# அடுத்த ஆண்டுக்கான பாடசாலைத் தவணைகள்

தாவடி,,டிசெ.1

2004ஆம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணையும் விவரங்களும் மனிதவள அபிவிருத்தி கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்கள் அல்லாத பாடசாலைகள் முதலாம் தவணையை ஜனவரி 5ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 2ஆம் திகதி வரையும் இரண்டாம் தவணையை ஏப்ரல் 27ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 6ஆம். திகதி வரையும் மூன்றாம் தவணையை செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையும் நடத்த வேண்டும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நிலையங்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் முதலாம் தவணையை ஜனவரி ஐந்தாம் திகதி தொடக்கம் மார்ச் 30ஆம் திகதி வரையும் இரண்டாம் தவணையை மே 12ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 20 ஆம் திகதி வரையும் 3ஆம் தவணையை ஒகஸ்ட் 30 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரை நடத்தவேண்டும்.

சகல பாடசாலைகளும் வருடத்திற்கு 210 நாள்கள் நடத்தப்படவேண்டுமென தெளிவுபடுத்தப்பட்டிருப்பினும் 2004ஆம் வருடத்தில் இடம்பெறும் அரச விடுமுறை தினங்களைக் கருத்திற்கொண்டு 199 நாள்கள் மட்டுமே நடத்த முடியும் என்றும் கூறப்படுகிறது.

(ஒ-149)

# வரவுநிலைப் பேராசிரியராக மீண்டும் குணானந்தன் பணியில்!

## நீதிமன்ற உத்தரவையடுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் வரவுநிலைப் பேராசிரியராக வைத்திய கலாநிதி வி.குணானந்தன் மீண்டும் பதவி ஏற்றுள்ளார்.

வரவுநிலைப் பேராசிரியராக இவர் பதவி வகித்து வந்தார். கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதியுடன் முடிவடைந்த இவரது பதவிகால ஒப்பந்தத்தை மீளப்புதுப்பிக்க யாழ். பல்கலைக்கழகப் பேரவை மறுப்புத் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக அப்பீல் நீதிமன்றத்துக்கு மனு ஒன்றைப் பேராசிரியர் குணானந்தன் தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அப்பீல் நீதிமன்றம் இடைக்கால உத்தரவாக இவருக்கு வரவுநிலைப் பேராசிரியராக நியமனம் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது. இது குறித்த அடுத்த நடவடிக்கை விசாரணையின் பின்னர் தீர்மானிக்கப்படும் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம்முதல் வைத்திய கலாநிதி வி.குணானந்தன் யாழ்.பல்கலைக் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் வரவுநிலை பேராசிரியராகப் பணியாற்றினார். அப்போது யாழ். போதனா வைத்தியசாலையில் மூளை, நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவிலும், மருத்துவபட மாணவர்களின் போதனைகளிலும் ஈடுபட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-139-173)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,டிசெ.1

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மானிப்பாய் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம், இளவாலை றோ.க.த.க. பாடசாலை, சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

முதலிரு பாடசாலைகளுக்கும் இலங்கை அதிபர் சேவை தரத்தை சேர்ந்தவர்களிடம் இருந்தும் ஏனைய மூன்று பாடசாலைகளுக்கும் இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2.1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியானவர்கள் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் வலிகாமம் வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் அறிவித்துள்ளார்.

(ஒ-10)

## கிடுகுக்குள் இருந்த பாம்பு இளைஞரைத் தீண்டியது!

டிராக்டரில் கிடுகுகளை ஏற்றிக் கொண்டிருந்த இளைஞரை அந்தக் கிடுகுக்கட்டுக்குள் இருந்த பாம்பு தீண்டியது.

மிருசுவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச் சம்பவத்தில் அல்வாய் தெற்கு, மாலுசந்திப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் யோகராசா (வயது 19) என்ற இளைஞரே பாம்பினால் கடியுண்டவராவார்.

பாம்புக்கடிக்கிலக்கான இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

# எய்ட்ஸ் அற்ற சமூகத்தை கட்டி எழுப்பிடுவோம்!

**சர்வதேச எய்ட்ஸ் தடுப்பு தினம் இன்றாகும். எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும்முகமாக நல்லூர் றோட்டறக்ட் கழகத்தால் இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**



எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர்

உயிர்கொல்லி நோயான எய்ட்ஸ் நோயை உலகிலிருந்து விரட்டும் நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் முகமாகவே டிசெம்பர் முதலாம் திகதியினை சர்வதேச எய்ட்ஸ் நோய்த் தடுப்புத்தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

தொற்று ஏற்பட்டபின் பல ஆண்டுகள் மறைந்திருந்து வெளிப்படும் தன்மையுள்ள எய்ட்ஸ் நோயானது 1981ஆம் ஆண்டு அமெரிக்காவிலேயே முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் அன்று ஒன்று, இரண்டு எனத் தொடங்கி நூற்றுக்கணக்கில் தென்பட்ட புள்ளிவிவரங்கள் இன்று மில்லியன் கணக்கைத் தாண்டிவிட்டன. இற்றைக்கு 4கோடி 50லட்சம் மக்களுக்கு இக்கொடிய நோயானது பரவியுள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. குறிப்பாக தென்கிழக்காசிய நாடுகளும், ஆபிரிக்க நாடுகளுமே இந்நோயால் அதிகமாக பாதிப்படைந்துள்ளன.

இலங்கையில் எய்ட்ஸ் நோய்க்கு சுமார் 8ஆயிரத்து 700பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் அதிகமாக எய்ட்ஸ் பரவியுள்ள மாவட்டங்களில் முதலிடத்தில் கொழும்பு மாவட்டமும் தொடர்ந்து கம்பஹா, களுத்துறை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களும் இனங்காணப்பட்டுள்ளன.

அன்றைய காலங்களில் யாழ். குடாநாட்டினைப் பொறுத்தவரை மக்கள் மத்தியில் கல்வி, கலாசாரம், பண்பாடு எனும் சிறப்பான அம்சங்களே மேலோங்கியிருந்தன. இவ்வாறிருந்த மக்கள் மத்தியில் இன்று எய்ட்ஸ் நோய் பரவும் வேகம் மிகவும் அதிகமாகி இலங்கையில் 5 ஆவது இடத்தினை யாழ்.மாவட்டம் பெற்றுள்ளது என்றால் அது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

**எய்ட்ஸ் நோய் பரவக் காரணம்?**

உலகளாவிய ரீதியில் பிரச்சினையாக காணப்படும் எய்ட்ஸ் நோய் எனப்படுவது "மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால் பெறப்படும் பல நோய்களின் கூட்டு ஆகும்." இந்நோய்க்குரிய மிகமுக்கிய காரணியாக எச்.ஐ.வி.(HIV) எனும் வைரஸ் இனங் காணப்பட்டுள்ளது. இந்த வைரஸானது மனிதனது நீர்ப்பீடன சக்தியை குறைக்கின்றது. இதனாலேயே எய்ட்ஸ் நோய் பாதிக்கிறது.

இவ்வாறு எய்ட்ஸ் நோய் பரவுவதன் முக்கிய காரணம் எம்மக்கள் மத்தியில் இந்நோய்த்தொற்றுப் பற்றிய பூரண அறிவும், விளக்கமும் இல்லாமையே ஆகும். உலகில் 99 சதவீதம் மக்களுக்கு பாதுகாப்பற்ற பாலியல் தொடர்பு மூலமே எச்.ஐ.வி. பரவுகின்றது என்பது உறுதி. தவிர இவ் வைரஸ் பரிசோதிக்கப்படாத குருதி மாற்றீடு, கிருமித் தொற்று நீக்கப்படாத மருத்துவ உபகரணப் பாவனை, எச். ஐ.வி. தொற்றுள்ள பெண் கருத்தரித்து குழந்தைபெறல் போன்ற காரணிகளாலும் பரவுகிறது.

ஒருவருக்கு எச்.ஐ.வி. தொற்றுள்ள போதிலும் அதனை வெளிப்படையாக இனங்காணமுடியாது. தொற்று ஏற்பட்ட ஒருவர் அதனை வெளிக்காட்டாது பல ஆண்டுகள் காவியாக வாழ்வார். எனவே இவ்வாறு காவியாக இருக்கும் ஒருவருடன் இன்னொருவர் உடலுறவு கொள்ளும் பட்சத்தில் அவரும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகலாம். அவ்வாறு உள்ளாகியிருப்பினும் அது எய்ட்ஸ் தொற்றென மருத்துவ ரீதியாக உறுதிசெய்ய 3 மாதங்கள் ஆகும்.

ஒரு மனித உடலில் இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்தி உண்டு. ஒரு நோய்க்கு உரிய நுண்ணங்கி நம் உடலைப் பீடித்தால் லிம்போசைற்ஸ் எனப்படும் ஒரு தொகுதி குருதிக் கலங்கள் அந்நுண்ணங்கியை அடையாளம் கண்டு எதிர்க்கும் எய்ட்ஸ் வைரஸ்கள் இந்த உடலைப் பாதுகாக்கும் லிம்போஸைற்ஸையே தாக்குகின்றன. இதனால் நோய் எதிர்ப்பு பொறிமுறைகள் யாவும் சீர்குலைந்து பாதிப்பேற்படுகின்றது.

எச்.ஐ.வி. தொற்றின் இறுதிக் கட்டமே எய்ட்ஸ் என்று கூறலாம். அந்நிலையில் மனிதனின் வாழ்நாள்கள் எண்ணப்படும் ஒன்றாகிவிடுகின்றன. இத்தொற்றுக்கு ஒருமுறை பாதிக்கப்பட்டால் மரணம் தழுவும்வரை இதிலிருந்து தப்பிக்கமுடியாது என்பது உறுதி. ஏனெனில் மருத்துவ ரீதியான அணுகுமுறையால் இந்நோயை ஒழிக்கமுடியாது என்பது யாவரும் அறிந்ததே. எனவே எய்ட்ஸ் ஏற்பட்டுவிட்டால் அதற்கு நிவாரணமே கிடையாது. "வெள்ளம் வருமுன் அணை கட்டவேண்டும்" என்பது போல் நாம் முன்னரே விழிப்புடன் செயற்படுவதே எய்ட்ஸ் நோய் ஏற்படாது பாதுகாக்கும் ஒரே ஒரு வழியாகும்.

அந்த வகையில் எய்ட்ஸ் பரவுவதனை தடுப்பதானால் வாழ்வின் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். விலைமாதருடனான உடலுறவை முற்றாகத் தவிருங்கள். தேவையேற்படின் இரத்தத்தை ஏற்படுத்தும் ஊசி, சவர அலகு போன்ற உபகரணங்கள் பாவிக்கும்போது நன்கு கிருமி நீக்கப்பட்ட உபகரணங்களையே பாவியுங்கள். எச். ஐ.வி. பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே ஏற்றிக்கொள்ளுங்கள்.

எமது கலாசாரத்தின்படி 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற வாழ்வைப் பின்பற்றுவதே எய்ட்ஸ் நோயைத் தடுக்க சிறந்தவழி என்பது பலரும் ஏற்றுக்கொண்ட உண்மை. முன்பின் தெரியாத ஒருவருடன் பாதுகாப்பற்ற முறையில் ஆணுறை பயன்படுத்தாது பாலியலுறவு கொள்ளாதீர்கள். சந்தேகத்துக்கிடமளியாது எய்ட்ஸ் நோய் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.

எனவே விழிப்புடன் செயற்பட்டு எய்ட்ஸ் அற்ற ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்புவோமாக!

# கல்விச்சாலைக் காட்சிகள்



**கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் ஆசிரியர் தின விழாவில் அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் விரிவுரையாளர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.** (எ)



**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோட்ட கல்விப்பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைக் காணலாம். அருகில் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், அதிபர் ந.சிவகடாட்சம், மாணவர் அமைப்பு மாவட்ட துணைப்பொறுப்பாளர் எஸ்.மணிவண்ணன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.** *(படம்: கோப்பாய் செய்தியாளர்)*



**மாதகல் சென்.யோசவ் மகா வித்தியாலயத்தில் புனரமைப்பு செய்யப்பட்ட முன்னாள் யாழ். ஆயர் அமரர் எமிலியானுஸ் பிள்ளை ஞாபகார்த்த வகுப்பறை மண்டபத்தின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது, அதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட யாழ். மறைமாவட்ட ஆயர் அதி.வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை உரை நிகழ்த்துவதை படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் மற்றும் விருந்தினர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.** *(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*



**வசாவிளான் மகா வித்தியாலயத்தில் கற்று 2001 - 2002ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களைப் படத்தில் காணலாம்.** *(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*

# பண்டிகைக்கால மலிவு விற்பனை


















# மரக்கறி விலை மழையால் உயர்வு

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழைகாரணமாக மரக் கறிகளின் விலைகள் மிகவும் உயர் வடைந்துள்ளன.

மருதனார்மடம், சுன்னாகம் போன்ற போதுச் சந்தைகளில் பெரும்பாலான மரக்கறிகளின் விலைகள் கிலோ ஒன்றுக்கு 60 ரூபாவுக்கும் கூடுத லான விலையிலேயே விற்கப்படு கின்றன.

மரவள்ளிக்கிழங்கு, கருணைக் கிழங்கு, வெண்டிக்காய் போன்ற ஒருசிலவே கிலோ 30 ரூபாவரை விற் கப்படுகின்றன. வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், பயற்றங்காய், கரட், லீக்ஸ், போஞ்சி, உருளைக்கிழங்கு போன்ற பல மரக்கறிகளின் விலை கள் உயர்வடைந்துள்ளன. (ஒ-152)

# உடுவில் ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு!

இணுவில்,டிசெ.1

உடுவில் தெற்கு புளியடி ஞான வைரவர் கோவிலில் பிள்ளையார் விக்கிரகமும், விஷ்ணுவின் வெண் கலச் சிலையும் திருட்டுப் போயுள்ளன.

இச்சம்பவம் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவதினத்தன்று மாலை பூசை முடிந்து ஆலயம் மூடப்பட்டது. அதன பின்னர் பெய்தகடும் மழையைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் விக்கிரகங்களைக் களவாடியுள்ளனர். மறுநாள் காலை அடியவர் ஒருவர் ஆலயத்திற்குச் சென்றபோது ஆல யக் கதவுகள் உடைக்கப்பட்டு சிலை கள் திருட்டுப்போயுள்ளமை தெரிய வந்தது.

(ஒ-49)



நெடுந்தீவில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ். கோபாலசிங்கம் ஈகச்சுடர் ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்: நெடுந்தீவு செய்தியாளர்)*

# வீதியைத் திருத்த கோரிக்கை

வலி.மேற்கு,டிசெ.1

யாழ்ப்பாணம், மானிப்பாய் - காரை நகர் பிரதான வீதியில் பல இடங்கள் குண்டும்குழியுமாகக் காட்சியளிக் கின்றன. இதனால், வீதிவிபத்துக்கள் இடம்பெறும் ஆபத்து நிலவுகின்றது. இவ்வீதியைத் திருத்தியமைக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

குறிப்பாக ஆனைக்கோட்டை, மானிப்பாய், கட்டுடை, சண்டிலிப் பாய், சங்கானை, சித்தன்கேணி, ஆகிய இடங்களில் இவ்வீதி பெரும் சேதமடைந்துள்ளது. இதனால் இந்த பிரதான வீதியைத் திருத்தியமைப் பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்களும் வாகன சாரதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ஒ-175)

# குடியிருப்புக்குள் வெள்ளம்

பாஷையூர் அந்தோனியார் ஆல யச்சுற்றாடலில் உள்ள குடிமனைப் பகுதிக்குள் மழைவெள்ளம் பெருக் கெடுப்பதால் குடியிருப்புக் காணி களில் உள்ளவர்கள் இடம்பெயர வேண்டி நேரிட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள மாதன் தோட்டம் பகுதியில் உள்ள நிரந் தரக் குடியிருப்பாளர்களின் வீடுகளே மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள் ளன.

இப்பகுதியில் உள்ள குளத்தி லிருந்து மேலதிக நீர் கடலுக்குச் செல்லும் வாய்க்கால் தூர்ந்து போயுள்ளதால் நீர் கடலை அடைய முடியாது அந்தந்தப் பகுதியிலும் அதன் அண்மையில் உள்ள குளப் பகுதியிலும் தேங்கிநிற்பதாகவும் கூறப்படுகிறது. (ஒ-88)

# விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.1

சர்வதேச தமிழ்மாணவர் பேரவை அலுவலகத்தினுள் அத்துமீறி பொலீ ஸார் நுழைந்தமை தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற இருந்த விசாரணைகள் பொலீஸ் தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டதையடுத்து பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப் பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நள்ளிரவு வேளை பொலீஸார் மற்றும் இராணு வத்தினர் சர்வதேச தமிழீழ மாண வர் பேரவை அலுவலகத்தினுள் அத்து மீறி சோதனையிட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் கடந்த வியாழன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத் தில் இடம்பெற இருந்தன. ஆனால், விசாரணைகளுக்கு அழைக்கப்பட்ட யாழ். பொலீஸ் நிலையப் பொறுப் பதிகாரி விடுமுறையில் சென்றுள்ள தால் அவர் சமுகமளிக்கமுடியாதுள் ளார் என்றும் -

இது தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின் னர் நடத்துமாறும் - யாழ். பொலீஸா மனித உரிமைகள் ஆணைக்குழு வின் இணைப்பாளர் ஆர்.பி.சந்திர சேகரானை கடிதம் மூலம் கேட்டுள் ளனர்.

இதனையடுத்து இந்த விசாரணை கள் இணைப்பாளரினால் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளன. (ம-5-ரி)

# இறக்குமதியாகும் உப்பால் உற்பத்தித்துறை பாதிப்பு

கொழும்பு,டிசெ.1

நாட்டின் பாவனையாளர்களின் வருடாந்தப் பாவனைத் தேவைக்கு மேலதிகமாக இங்கு உப்பு தயாரிக் கப்பட்ட போதிலும் 20 ஆயிரம் மெற்றிக்தொன் உப்பு இந்தியாவி லிருந்து இறக்குமதி செய்யப்படுகி றது. இது நாட்டின் உப்பு உற்பத் தித்துறைக்குப் பெரும் அச்சுறுத்த லாக அமைந்துள்ளது. இவ்வாறு ஸ்ரீலங்கா உப்பு நிறுவனம் தெரிவித் துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இன்றுவரை ஐந்து கோடி ரூபாவுக் கும் அதிக பெறுமதியுடைய உப்பு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய் யப்பட்டுள்ளதாக உப்பு நிறுவனத் தின் அத்தியட்சகர் கமிலஸ் ரணவீர தெரிவித்துள்ளார்.

விசேடமாக முறையற்ற விதத் தில் இறக்குமதி செய்யப்படும் இந்த உப்பு தரக்குறைவானதென்பதுடன் அளவுக்கு அதிகமான அயடீன் சத்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

இலங்கையின் வருடாந்த உப் புப் பாவனை ஒருலட்சத்து 30 ஆயி ரம் மெற்றிக்தொன்னாக உள்ள நிலை யில், ஸ்ரீலங்கா உப்பு நிறுவனத்தால் வருடாந்தம் 90 ஆயிரம் மெற்றிக் தொன் உப்பும் இங்குள்ள ஏனைய நிறுவனங்களால் 60 ஆயிரம் மெற் றிக்தொன் உப்பும் உற்பத்தி செய் யப்படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

(ஒ)

# சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கிறோம்!

## கஜேந்திரகுமார் எம்.பி. கூறுகின்றார்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூன்றாவது (2004) வரவு - செல வுத் திட்டத்தின் இரண்டாம் மதிப்பீட்டின் போது 2003 நவம்பர் 27ஆம் திகதி கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரை யின் முதலாவது பகுதி நேற்றுமுன் தினம் உதயனில் 'வரவு - செல வுத் திட்டத்தில் வடக்கு - கிழக் குக்கு அரசு ஒதுக்கிய நிதி அற் பத் தொகை' என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது. அவர் நிகழ்த்திய உரையின் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகிறது.

அரசாங்கம் கோருகின்றவாறு, பெரிய வியாபாரங்களுக்கும், கைத் தொழில்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள நன்மைதான் வரவு - செலவுத் திட்டத் தின் உந்து சக்தியாக விளங்குகின் றது. எனினும் வடகிழக்கைப் பொறுத்த வரை இது ஏற்புடையதல்லவென்பதை நாம் அறிவோம். ஏனெனில், அப்பிராந் தியத்தை அடிப்படையாகக் கொண்ட பெரிய வியாபாரம் எதுவுமில்லை. அடுத்து அரசாங்க சேவையாளர்களின தும் கூட்டுத்தாபன ஊழியர்களினதும சம்பள அதிகரிப்பும் உரமானியங்களின அதிகரிப்பும் பற்றியவை. ஏனைய பேச் சாளர்கள் இவ்விடயங்களைப் பற்றிய பேசியுள்ளதனாலும் அவை பற்றிய சந் தேகங்களும் அவற்றின் குறைபாடு களும் மிகவிரிவாகச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதனாலும் அவற்றை நான் ஆராயவிரும்பவில்லை. எனினும், இச் சம்பள அதிகரிப்புகள் யுத்தத்தினால் துவண்டுபோயுள்ள மக்களின் தேவை களை எவ்வகையிலும் ஈடுசெய்ய வில்லையென்றும், உரமானியங்களில் அதிகரிப்பு, உரத்துக்கான விலையில அண்மைக்காலங்களில் ஏற்பட்ட அதி கரிப்புக்கு எவ்வகையிலும் இணையான தில்லையென்றும் கூறுதல் பொதுமா னது. உண்மையில் மானியங்கள் அதி கரிக்கப்பட்டபோதிலும், உண்மையான நாணய வீதப்படி ஒரு விவசாயி ஓராண்டுக்கு முன்னர் உரத்துக்காகச் செலுத்திய விலையை விடக் கூடிய விலையை இன்று செலுத்த வேண்டி யுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக வறிய வர்களுக்குத் தேவைப்படும் பொருள் கள் மீதான பெறுமதிசேர் வரி (வற்) 10% இலிருந்து 15%ஆக அதிகரிக்கப் பட்டமை. வடகிழக்கில் மீண்டும் மீது தொடர்கின்ற கட்டுப்பாடுகள், தனியார் ஆதனங்களையும் விவசாயக் காணி களையும் இராணுவம் ஆக்கிரமித்துள் ளமை என்பவை அப்பிராந்தியத்தின் மக்கள் தொடர்ந்தும் மிகமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருத்தலைத் தான் உறுதிப்படுத்தும்.

### முன்னேற்றத்துக்கான பாதை

அவ்வாறாயின், முன்னேற்றத்துக் கான பாதை எதுவாக இருக்க வேண் டும்? எமக்கெதிரேயுள்ள அளப்பெரும் பொறுப்பின் சிக்கலான தன்மையை வடகிழக்கிலுள்ள மக்கள் மட்டும்தான் விளங்கிக்கொள்ளக்கூடுமென்பதை நான் குறிப்பிட்டுள்ள விடயங்கள் தெட் டத்தெளிவாகக் காட்டுகின்றன. இதன் அடிப்படையில் வடகிழக்கிலுள்ள மக் கள்தான் தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பைக் கையாள்வதில் வெற்றி காண முடியுமென்று நான் பணிவு டன் வலியுறுத்த விரும்புகின்றேன்.

எமக்குத் தேவையானது எதுவென் றால், வழமை நிலைமைக்குத் திரும்பு வதும் மக்களின் முழுநிறைவான வாழ்க் கையையும், கௌரவத்தையும் மீண் டும் கட்டுவதுமென்ற உறுதிப்பாட்டின் பேரில், தளராது தொடர்கின்ற அபிவி ருத்தியைச் சாதிப்பதற்கான ஓர் தொடர்ந் தான உடனடி உபாயமும் நடுத்தரக் கால உபாயமும் தான் எமது சிந் தனை வெறும் நிவாரணத்துக்கும் புனர மைப்புக்கும் அப்பால் சென்று உடன டியாகவும் நடுத்தரக் காலத்திலும் தளராது தொடரக்கூடிய அபிவிருத் தியை நோக்கிச் செயற்பட வேண்டும். இதனைச் செய்வதற்கு புனர்வாழ்வு - புனரமைப்பு - மீள்குடியமர்வு மற் றும் அபிவிருத்தி தொடர்பான எல்லா வேலைகளும் முழுமையாக ஒன்றி ணைக்கப்பட்ட ஒரு முயற்சியினூடாக மேற்கொள்ளப்படவேண்டும். தற்போது நிலவுகின்ற தருணத்துக்கேற்றதும், குறுகியதும் துண்டாடப்பட்டுப் பிரிவு களாக வகுக்கப்பட்டதுமான கருத்திட்ட அணுகுமுறையை நாம் தூக்கியெறிந்து விட்டு ஒட்டுமொத்தமான அரசியல் பொருளாதாரமொன்றைத் தேடவேண் டும். பிராந்தியத்தின் அகல்விரிவான கலாசார சமூக - அரசியல் பரிமாணங் களைக் கவனத்தில் கொள்கின்ற ஓர் உபாயத்தைத் தேட வேண்டும். எமது அடிப்படைக் குறிக்கோள், தாராளமய மாக்கப்பட்ட உள்நாட்டு மற்றும் உல



கப் பொருளாதாரமொன்றில் காலப் போக்கில் போட்டியிடக்கூடியதும் மக் களுக்குச் சொந்தமானதுமான பயனு றுதியுள்ள, தற்சார்புடைய, தளராது தொடர்கின்ற பொருளாதாரமொன்றை உருவாக்குதலாகும். நாம் பின்வருவன வற்றை உருவாக்குவதன் மூலம் அத்தனைய நிறுதித் தன்மையைச் சாதிப்பதற்குக் கடுமுயற்சி செய்ய வேண்டும்.

### ஒரு தற்சார்புடைய மக்களின் துறை

ஒரு சமூகப் பொறுப்புடைய தனி யார்துறை, அத்துடன் மீள ஆற்றுப் படுத்தப்பட்டு புதுமுறை காண்கின்ற, ஆதரவான ஒரு பொதுத்துறை.

எனவே, வடகிழக்குக்கு சுய நிர்ணயக் கோட்பாட்டுக்கிணங்கிய தாக முற்றிலும் புதிய நிதிக்கட்டுக்கோப் பொன்று வடிவமைக்கப்பட வேண்டும். இது தெற்கில் தோல்வியடைந்தவு டன், தவறான பொருளாதார முகா மைத்துவத்துக்கும், ஊழலுக்கும் நிதி மற்றும் பிறவனங்களின் திறமையற்ற விரயமான பயன் பாட்டுக்கும் பெரு மளவில் பங்களித்ததுமான, நடப்பி லுள்ள நிதி நிறுவனங்களை வெறு மனே பன்முகப் படுத்துவதாகவோ, பிரதி பண்ணுவதாகவோ இருக்கக் கூடாது. அத்துடன், வடக்கு - கிழக்கிலிருந்து சேமிப்புக்களின் வெளிக்கசிவுகளைத் தடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். எடுத்துக் காட்டாக, தேசிய சேமிப்பு வங்கியின் சேமிப்பி லிருந்து 2001இல் ஒரு மில்லியன் ரூபா வரையிலும், 2002இல் 2.3மில் லியன் ரூபா வரையிலும் வழக்கமான முறையில் பிராந்தியத்துக்கு வெளியே இடமாற்றப்பட்டதாகத் தேசிய சேமிப்பு வங்கியின் அண்மைக்கால அறிக்கை யொன்று காட்டுகின்றது. ஏனைய வங்கி களாலும், காப்புறுதிக் கம்பனிகளாலும் பிற நிதி நிறுவனங்களாலும் இடம் மாற்றப்பட்டவற்றைக் கூட்டிப் பார்த் தால், எந்தளவுக்குப் பணம் கசிந்து வெளியேறுகின்றதென்பது தெளிவா கப் புலப்படும். எனவே, இப் புதிய நிதிக் கட்டுக்கோப்பு பிராந்தியத்தில் திரட்டப்படும் சேமிப்புக்கள் பிராந்தி யத்திலேயே மீள முதலிடப்பட வேண்டு மென்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

### இடைக்கால நிர்வாகம்

புதிய நிதிக்கட்டுக்கோப்புப் பற் றிய இக்கதையெல்லாம் சொல்லும் போது நன்றாகத்தானிருக்கும். ஆனால், அத்தகைய நடவடிக்கைகளைத் தள ராமல் தொடரச் செய்வதற்கும், செயற் படுத்துவதற்கும் உருப்படியான நிர் வாகமொன்று வடக்கு - கிழக்குக்கு இல்லாதிருப்பின் அது பயனற்றதாகி விடும். இங்குதான் அரசியல் வாதங் களுக்கு மேலதிகமாக, இடைக்கால நிர்வாகமொன்றின் இன்றியமையாத தேவை தெளிவாகப் புலப்படுகின்றது. இவ்விடயத்தில், தமிழ்த் தேசிய கூட்ட மைப்பின் நோக்கில், ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான விடு தலைப் புலிகளின் ஆலோசனைகள், தமிழ்த்தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்குவது டன், அவை புனர்வாழ்வளிக்கப்பட்ட, புனரமைக்கப்பட்ட, மீளக்குடியமர்த் தப்பட்ட அத்துடன் அபிவிருத்தி செய் யப்பட்ட ஒரு வடக்கு - கிழக்கென்ற கனவு நனவாவதற்கு அத்தியவாசி யமான நிதிக் கட்டமைப்புக்களையும் உள்ளடக்குகின்ற விரிவான ஆலோச னைகளின் ஒரு தொகுதியுமாகும். இடைக்கால நிர்வாகத்துக்குச் சாதக மாகவும், அதன் சாத்தியத்தன்மை பற்றியும், தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் ஏனைய பேச்சாளர்கள் மிக விரி வாக வாதிட்டிருப்பதனால் நான் அவற் றில் ஈடுபடவில்லை.

இறுதியாக, நான் இதனைக் கூற விரும்புகிறேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இச்சபையினுள்ளே யும், வெளியேயும் பேசுகின்றபோது வடக்கு - கிழக்கின் 90வீதத்துக்குக் கூடிய வாக்காளர்களின் பூரண ஆதர வுடன் நாம் பேசுகின்றோமென்பதை இச்சபையின் உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த வரவு - செலவுத்திட்டம் தொடர்பில் நாம் பெரும் ஏமாற்றமடைந்துள்ளோமென்று நாம் கூறுகின்றபோது அந்த ஆதரவில் முழுப் பலத்துடன் தான் நாம் அத னைக் கூறுகின்றோம்.

எமது மக்களின் நிர்க்கதி நிலை பற்றி ஆழ்ந்த கவலை கொண்டுள்ள நாம், நீண்டகாலமாகத் துயரத்தில் துடிக்கின்ற எமது மக்களுக்கு இவ் வரவு - செலவுத்திட்டத்தில் எதை யும் காணவில்லை. நாம் முற்று முழு தாக இவ்வரவு - செலவுத் திட்டத் தில் நல்ல அம்சங்களை அல்லது அத்தகைய அம்சங்கள் இல்லாமையை மட்டும் ஆராய்ந்து பார்த்து வாக்களிப் பதென எண்ணியிருந்தோம். அதற்கி ணங்க வாக்களிப்பதைத் தவிர்க்கத் திட்டமிட்டிருந்தோம்.

எனினும் நாம் வேறுபட்ட காலத்தில் வாழ்கின்றோமென்பதையும் எம்மைச் சூழவுள்ள பரந்த காட்சியை நாம் கவனத்தில் கொள்ளவேண்டுமென்ப தையும் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். எனவே, வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் நாம் ஏமாற்றமடைந்துள்ள போதிலும், நீண்ட துயரத்தை அனு பவிக்கின்ற எமது மக்களுக்கு உருப் படியாக எதுவும் அதில் இல்லாத போதிலும் நிச்சயமற்ற அரசியல் சூழ் நிலையென்ற காரணத்தினால் மட்டும், இந்த அரசு சமாதானச் செயல்முறை யில் காட்டுகின்ற திடசங்கற்பத்தை நாம் பாராட்டுகின்றோமென்ற காரணத்தி னால் மட்டும் நாம் இதனை ஆதரிக் கத் தீர்மானித்திருக்கின்றோமேயன்றி, வேறு எதற்காகவும் அல்ல. அரசாங் கம் இதனை மறந்துவிடும் கேடுவிக்க தவறைச் செய்யாதிருக்கட்டும். ✱

## தேவை

யாழ்ப்பாணத்தில் 3 மாடிக் கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

※ CIVIL ENGINEERS (கட்டடங்கள் நிர்மாணிப்பதில் அனுபவமுள்ளவர்கள்)
※ NDT (5 வருட அனுபவமுள்ளவர்)
※ NCT (10 வருட அனுபவமுள்ளவர்)
※ நிர்வாக உதவியாளர் (Administrative Assistant)
※ தொழில்நுட்ப உதவியாளர் (Technical Assistant)
※ ஒட்டுநர்கள் (Welders)

ஏழு நாள்களுக்குள் தபாலிலோ அல்லது பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: **SAMACON LTD,**
(25227) விள. இல: 2108, மே/பா. உதயன். (25-13-16)

## தேவை

கணனியில் Ms-Office, Page Maker, Corel DRAW தெரிந்த பெண்பிள்ளை உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகட்கு:

**மாயவன்**
**தொலைத்தொடர்பகம்,**
212, இராமநாதன் வீதி,
*(யாழ். பல்கலைக்கழகம் முன்பாக)*
திருநெல்வேலி.
T.P: 021 - 222 - 2641
(25255) (25-13-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை
திருமதி சிவஞானவதிஅம்மா பொன்னம்பலம் அவர்களின் அன்புக் கணவர்

### அமரர் பொன்னம்பலம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கேற்றுக்கொள்கின்றோம்.
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை,
அதிபர், ஆசிரியர்கள்,
(25242) (25-13-16) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



சுவிஸ்சில் வசிக்கும்
திரு.திருமதி உதஜேந்தன் - அருட்செல்வி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

### செல்வி மதுஷா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (01. 12. 2003) திங்கட்கிழமை சுவிஸ்சில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பம்மாமார், அம்மம்மாமார், மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், பூட்டம்மா அனைவரும் நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்பாள் துணையுடன் சீரோடும சிறப்போடும் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : அம்மம்மா பரமேஸ்வரி தில்லைநாதன், நயினாதீவு-7.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 17 - 01 - 1967



உதிர்வு 01 - 11 - 2003

அமரர்
### செல்லையா ஸ்ரீசெல்வசதீஸ்குமார்

*(பிரதான வீதி, மாதகல் பத்மியா ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)*

அன்பின் அப்பாவே! அரவணைக்க யாருமில்லை
ஒருமாதம் ஆனதப்பா உம் முகத்தை நாம்பார்த்து
எம்மனதில் தெய்வமாய் நிலைத்தவரே!
எம்மை விட்டுத் தொலைதூரம் போனதேனோ?
உடலால் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு அகலாது.

கடந்த 01-11-2003 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் அமரர் செல்லையா ஸ்ரீசெல்வசதீஸ்குமார் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (01. 12. 2003) திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரதான வீதி,*
*மாதகல்.* (25246) (26-25-13-16) - குடும்பத்தினர்.




உங்களின் சகல தொலைபேசி அழைப்புக்களுக்கும் எந்நேரமும் டயலொக் உடன்

டயலொக்கின் புதிய சேவை நிலையங்கள் இல. 141 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். இல. 47, மத்திய வீதி, திருகோணமலை.

கட்டணங்களை செலுத்துதல், புதிய இணைப்புகளை ஏற்படுத்துதல் (முன்னர் செலுத்தப்பட்ட - கார்ட் மற்றும் பின்னர் செலுத்தும் (பற்றுச்சீட்டு), புதிய தொலைபேசி கருவிகளை வாங்குதல், சார்ஜ் அட்டைகளை (Charged Cards) வாங்குதல், CLI, SMS உட்பட ஏனைய கட்டணத்துக்கான சேவைகளை இங்கே பெற்றுக்கொள்ளமுடியும்.

டயலொக் GSM
எதிர்காலம் இன்றே.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்து கார்த்திகை நட்சத்திரத்தில், நல்ல பண்பான, 36 வயது, செவ்வாய் தோஷமற்ற, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற மண மகனுக்கு அழகான, குணமான மண மகள் தேவை. தொடர்பு: சண்முக ரட்ணம் (சந்திரா), தலையாளி, கொக் குவில். T.P.: 077 6154263 (25257)

கௌரவ குடும்பத்து நல்ல பண் பான, 32 வயது, விசாக நட்சத்திரத் தில் செவ்வாய் தோஷமற்ற, லண் டன் பிரஜாவுரிமை பெற்ற மண மக னுக்கு படித்த, அழகிய, கௌரவ மான குடும்பத்தில் மணமகள் தேவை. சீதனம் அவ்வளவாக எதிர்பார்க்கப் படமாட்டாது. தொடர்பு: சண்முக ரட்ணம் (சந்திரா), தலையாளி, கொக்குவில். T.P.: 077 6154263 (25258)

## வீடு விலைக்குத் தேவை

கொக்குவில், காங்கேசன்துறை நெடுஞ்சாலையை அண்டிய பகுதி களில், நல்லூர், யாழ்ப்பாணப் பட் டினப் பகுதிகளில் வீடு விலைக்குத் தேவை. தரகர்கள் தேவையில்லை. தொடர்பு: திருநாவுக்கரசு, 127/7, கோயில் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222 2376 (25259)

## வானொலி நாடக நூல்

எழுதுவது எப்படி? என்று விளக்கிக் கூறும் முதலாவது தமிழ்நூல். 365 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதி யது. இலக்கியம் பற்றிய பல செய்தி களைச் சொல்வது 170 பக்கங்கள். (25231)

## வீடு வாடகைக்கு தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் 3 பேர் கொண்ட சிறு குடும்பத்திற்கு (Attached Toilet & Bathroom) உள்ள சிறுவீடு யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட வாடகைக்கு தேவை. தொடர்பு: விள.இல.2107, மே/பா உதயன். (25218)

## தவறிவிட்டது

து.ஜெயராஜ் என்பவரது தே.அ. அ.(இல.672383153V), வி.அ.அ., தொழில்நுட்பக் கல்லூரி தொழில் அ.அ., செஞ்சிலுவைச் சங்க அ.அ., சாரதி அனுமதிப்பத்திரம் என்பன முகமாலை சோதனைச்சாவடியில் 18.11.2003 இல் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் தயவுசெய்து பின் வரும் முகவரியில் ஒப்படைத்து உதவ வும். து.ஜெயராஜ், மே/பா வைர வப்பிள்ளை, கலையாவத்தை, புலோலி தெற்கு, புலோலி. (25261)

## வீடு விற்பனைக்கு

எல்டேரமுள்ள, பாதியதுடுவ வீதி யில் 5 பேர்ச் வீடொன்று சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு. 2 படுக்கை அறைகள், மண்டபம், சமையலறை மற்றும் 2 குளியலறை களும் மலசல கூடங்களும் கொண் டது. விலை 11 லட்சம். தொடர்பு: 0777 758226 அல்லது 2947652. (சி-31626)

## குடத்தனை வீதியை புனரமைக்க கோரிக்கை

வரணி,டிசெ.1

வரணி - குடத்தனை பிரதான வீதியில் தற்சமயம் புனரமைக்கப் படாமல் இருக்கும் பகுதியைப் புனர மைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாசேரி சனசமூகநிலையம், வீதி அபி விருத்தி திணைக்களத்தின் பிரதான பொறியியலாளரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

மேற்படி வீதியின் ஒருபகுதி மூன்று வருடங்களுக்கு முன்னர் புனரமைக்கப் பட்டது. எனினும், வீதியின் எஞ்சிய பகுதி இதுவரை புனரமைக்கப்பட வில்லை. (எ-170)

## Lap Top Computer விற்பனைக்கு உண்டு

Pentium III 1.10 G.Hz
256 RAM
20 GB Hard Disk
DVD ROM with writer
விபரங்களுக்கு:
*No. 61, Pc Paradise,*
*Clock Tower Road.*
**T.P.: 0777 271220**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி வடக்கு J/285
கிராம சேவை
உத்தியோகத்தராகிய
**திரு.இராமன் யோகராசா**
அவர்கள் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அவரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவரின் நற்பணி மேன்மேலும் தொடர நெல்லி ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கிறோம்.

அங்கத்தவர்கள்,
அச்சுவேலி கலைமகள் சனசமூக நிலையம்,
நெல்லி ஞானவைரவர் ஆலயம்.

(25226)(35-24-13-18)

## அரசாங்க அறிவித்தல்

பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை சுகாதார சேவைகள்
யாழ்ப்பாணம்.

2004 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவுசெய்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங் களுக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பொது நிறு வனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் நிறுவனங்களும் பதிவுசெய்துகொள்ளலாம்.

1. அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும்
2. சமுர்த்தி முகாமையாளர்கள்
3. அரச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்கள்.

### அ. பொருள்கள்

01. காகிதாதி எழுதுபொருள்கள்
02. பாவனைப்பொருள்கள்: ஈர்க்கில், தடி, தும்புத்தடி, சவர்க்காரம், தீப்பெட்டி, விம், காப்பிக் முதலியன.
03. வைத்தியசாலை பாவனைக்கான துணிவகைகள்: வைத்தியசாலைத்துணிகள், சீருடைத்துணிகள்.
04. மரத்தளபாடங்கள்
05. உருக்குத் தளபாடங்கள்
06. கட்டடப்பொருள்கள்
07. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் ரயர், ரியூப், பற்றறி உட்பட
08. நீர் வழங்கு பொருள்கள்
09. பிளாஸ்டிக் பொருள்கள்
10. இரும்பு, பித்தளை, கன இரும்பு பொருள்கள்
11. மின்சார உபகரணங்கள்
12. இறப்பர் முத்திரைகள்
13. அலுமினியப் பாத்திரங்கள்
14. கணனி இயந்திரம் - அதனுடன் இணைந்த உபகரணங்கள்
15. நிழற்படப் பிரதி இயந்திரம், றோனியோ இயந்திரம், தட்டச்சு, தொலைக்காட்சிப்பெட்டி ஆகியனவும் அவற்றிற்கான உதிரிப்பாகங்களும்.
16. அச்சிடுதல்.

### ஆ. சேவைகள்

01. மரத்தளபாடம், உருக்குத் தளபாடம் திருத்தம்
02. மின் இயந்திரங்கள், உபகரணங்கள் திருத்தம் மின் பிறப்பாக்கி, குளிர் சாதனம் போன்றவை
03. மோட்டார் வாகன திருத்தம்
04. மோட்டார் வாகன சேவிஸ்
05. கணனி, நிழற்படப் பிரதி, றோனியோ, தொலைக்காட்சிப்பெட்டி ஆகியன திருத்தம்
06. அடையாள அட்டை கவரிடுதல்
07. மோட்டார் மீள முறுக்குதல்

மேற்படி வேலைகளுக்காக பதிவுசெய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பத்தினை எனது பணிமனையில் ரூபா 100/- பதிவுக் கட்டணமாக செலுத்தி பெற்று 30.12.2003 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ள லாம்.

வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

வைத்திய கலாநிதி க.தா.சிவபாதம்,
பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

(சி-31561) (25-24-13-18)

## அபிவிருத்தித்துறை எழுத்தாளர்களுக்கு ஓர் அறிவித்தல்

புனர்வாழ்வளிப்பு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சு நோராட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். நீரவள, சூழலியல் பாதுகாப்புத்திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. மூன்றாண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டிய இத்திட்டத்திற்காக நோராட் நிறுவனம் ரூ. 150 மில்லியனை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட வுள்ள செயற்றிட்டங்களாவன:

i. வழுக்கியாற்று ஏரியில் உப்புச் சேர்வதைத் தடுத்து நீர்ப்பாசன அமைப்புக்களைப் புனரமைத்தல்.
ii. உப்பாறு ஏரியில் உப்புச்சேர்வதைத் தடுத்தலும், தடை வரம்புகளை மீளமைத்தலும்.
iii. யாழ். நகர எல்லைக்குள் உள்ள குளங்களையும், வாய்க்கால்களையும் புனரமைத்தல்.
iv. திண்மக் கழிவுகளை உபயோகித்து கூட்டெரு தயாரித்தல்
v. மழைநீர் சேகரித்தல்

மேற்குறித்த செயற்பாடுகள் யாவற்றையும் விளக்கும் திட்ட அறிக்கை ஆங்கில மொழியில் எழுதப்பட்டு உள்ளது. இதன் மொழிபெயர்ப்பை வெளியிடுவதற்குப் பதிலாக இந்த அறிக்கையின் சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாகவும் யாழ். குடாநாட்டின் நீர்வளம், அதன் பாதுகாப்பு நீர் வளத்துடன் தொடர்புபட்ட சூழல் மாசடைதல் பிரச்சினைகள் ஆகியவற்றை எளிமையும் அழகும் பொருந்திய நடையில் தமிழில் எழுது வித்து பிரசுரம் செய்யவுள்ளோம். உயர்கல்வி மாணவர்கள், பொதுமக்கள், ஆய்வாளர்கள் ஆகிய யாவருக்கும் இந்நூல் பயன்தரக்கூடியதாக இருக்கும். நூல் டெமி அளவில் 100 - 120 பக்கங்கள் உடையதாய் இருத்தல் வேண்டும். இடவிளக்கப்படங்களும், பொறியியல் வேலைகள் பற்றிய படங்களும் நூலில் இடம்பெற வேண்டும். தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*தகைமை:* புவியியல், விவசாயம், பொருளியல், பொறியியல் ஆகிய துறைகளில் பின்பட்டப்படிப் பும், தமிழில் நூல்கள் கட்டுரைகள் எழுதிப் பிரசுரித்துள்ள அனுபவ அறிவும்.

*நிபந்தனைகள்:*
★ தட்டச்சுப் பிரதியாக நூலை வழங்கவேண்டும்.
★ ஒப்பந்த வேலை கையளிக்கப்பட்ட திகதியில் இருந்து இருமாத காலத்திற்குள் வேலையை முடித்தல்வேண்டும்.
★ ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கும் கொடுப்பனவை குறிப்பிடல் வேண்டும்.

கே.சண்முகலிங்கம்,
பதில் செயலாளர்,
புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சு,

இல. 14, 3ஆவது மாடி - BOI கட்டடம் (BOI Building)
சேர் பறன் ஜயதிலக மாவத்த
கொழும்பு - 01.

(சி-31572) (24)

## CHURCH OF SOUTH INDIA
DIOCESE OF JAFFNA

***COMFORT HOMES for ELDERLY CITIZENS***
**Opening in 2004**

For further information, Contact:
Sister **Ann Watson** S.R.N.(Lon.)
McLeod Hospital,
K.K.S. Rd.,
Inuvil, Jaffna. (C/31556)(34-13-16-24)



## வட கிழக்குத் தொழில்நுட்பம்
34, சட்டநாதர் வீதி, நல்லூர்.
தொலைபேசி - 021-2223786

எம்மிடம் PI, PII, PIII, PIV வகையான கணனிகள் 13,500/= இலிருந்து 46,000/= வரையிலான விலைகளில் விற்பனைக்கு உண்டு. சொற்ப எண்ணிக்கையான கணனிகளே கையிருப்பில் உள்ளதால் இவ்வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்.

MOBILE PHONESகளும் குறைந்த விலைகளில் விற்பனைக்கு உண்டு.


## மனமார வாழ்த்துகின்றோம்



எமது பேரன்புக்குரிய
**திரு.ஐ.கோ.சந்திரசேகரம்**
(மாணவ ஒழுக்காற்று அதிகாரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

அவர்கள் சென்ற 19.11.2003 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்தமையையிட்டு அவருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவர்தம் எதிர்காலம் மேலும் சிறக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலச்சேவைகள் கிளை.
சிரேஷ்ட மாணவ ஆலோசகர் அலுவலகம்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/31611)(34-13-16-24)

**- நண்பர்கள்.**

## பாராட்டி வாழ்த்துகிறோம்



தவசிகுளம், மிருசுவிலைச் சேர்ந்த
**திரு.கிருஷ்ணன் இராசையா**

அவர்கள் 04.11.2003 அன்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிவான் கௌரவ பா.சுப்பிரமணியம் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் பரந்தாமன் ஆச்சிரமத்தின் தொண்டராகவும் தவசிகுளம் மகா விஷ்ணு ஆலயத்தின் பரிபாலகராகவும் தவசிகுளம் J/328 கிராம முன்னேற்றச் சங்கத்தின் முன்னாள் கணக்காளராகவும் தற்போது தவசிகுளம் கொடிகாமம் கிளை இல.18, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளராகவும் கிராமசேவையாளரின் நலன்பேணும் குழுக்களின் ஓர் உறுப்பினராகவும் சேவை செய்து வருகின்றார். இவருடைய சேவை மேலும் தொடர அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(25256) (26-13-16) **- தவசிகுளம் வர்ழ்மக்கள்**

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக நூலக குடும்பத்தில் இணைந்து எம்முடன் பணியாற்றிய
**கந்தையா இராஜேந்திரா**

அவர்களின் மறைவு குறித்து நாம் மிகவும் துயரமடைவதோடு பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்..

**நூலகக் குடும்பம்**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(25238) (26-13-16-24)

## நன்றி நவிலல்

எமது தந்தை
**அருளப்பா தம்பிராசா**
(சின்னப்பு மாஸ்டர்)

அவர்களது மறைவுச்செய்தி அறிந்து எம்முடன் இணைந்து துயர் பகிர்ந்து கொண்ட அயலவர்கள், உறவினர்கள், மடுத்தீனார் குரு மடத்தில் நடைபெற்ற இரங்கல் திருப்பலியில் கலந்துகொண்ட யாழ். ஆயர், குரு முதல்வர், யாழ். மறைக்கோட்ட குரு முதல்வர், இளைப்பாறிய குரு முதல்வர், சகோதர குருக்கள், அருட்கன்னியர்கள், அருட்சகோதரர்கள், நண்பர்கள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமிருந்து தொலைபேசிமூலமும், தந்தி வழியாகவும் எமக்கு அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும், நல்லடக்கதினம் யாழ். பேராலயத்தில் இடம்பெற்ற இரங்கல் திருப்பலியில் கலந்து செபித்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிற்காக செபிக்குமாறு வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்,
5/7, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

அருட்தந்தை T.J.கிருபாகரன்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

(C/31605)(34-13-16-24


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 530 |
| திகதி | 28.11.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5344718-5359091

வெற்றி இலக்கங்கள் **36 47 52 53**



லக்கினம்
விருட்சிகம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,723,100/-
வெல்லப்படவில்லை.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,426,800/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 315,175 | 10 | 3,151,750 |
| 2 இலக்கங்கள் | 28,966 | 20 | 579,320 |
| 1 இல + லக்கினம் | 28,521 | 30 | 855,630 |
| 2 இல + லக்கினம் | 2,610 | 100 | 261,000 |
| 3 இலக்கங்கள் | 760 | 500 | 380,000 |
| 3 இல + லக்கினம் | 74 | 5,000 | 370,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,723,100 | - |
| மொத்தம் | 376,110 | - | 5,997,700 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.5,997,700/-

தொடர் இல. 4369474க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 02ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் மூச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5353212-8-74
5358486-9-05
5355725-7-53
5349797-8-12
5346069-5-51

PHOENIX O&M



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3157275 இருந்து
3173755 வரை
சீட்டிழுப்பு இல. 1457
திகதி 29.11.2003

வெற்றி எண்கள் **05 07 17 24 57** போனஸ் எண் **33**

ஜக்பொட் பரிசு
**ரூபா.1,500,000/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | - | 100,000/- | - |
| 4 | 84 | 10,000/- | 840,000/- |
| 3 | 5,110 | 500/- | 2,555,000/- |
| 2 | 85,392 | 20/- | 1,707,840/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 05ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 104,581 | 10/- | 1,045,810/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,148,650/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
**ரூபா.2,307,600/-**

தொடர் இல. 2204657க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 டிசம்பர் 03ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3167056-2-31
3159309-1-94
3161227-4-65
3158032-9-14
3161610-2-23

PHOENIX O&M

# யாழ். மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுகிறது மலேஷிய கிறீன்ரவுண் ரோட்டறிக் கழகம்

புத்தூர், வாதரவத்தையில் பெரிய பொக்கணைக் கிராமம் பின்தங்கிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருக்கின்றது. இக்கிராமத்தில் 50 குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றன.

இக்கிராம மக்களுக்கு கைகொடுக்க முன்வந்துள்ளது மலேஷிய கிறீன்ரவுண் ரோட்டறிக் கழகம்.

இந்தக் கழகத்தின்கீழ் செயற்படும் எட்டு கிளைக் கழகங்களின் பிரதிநிதிகள் அடங்கிய 40 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த சனிக்கிழமை அக்கிராமத்துக்கு விஜயம் மேற்கொண்டது.

யாழ். ரோட்டறிக் கழகமும் கொழும்பு மேற்கு ரோட்டறிக் கழகமும் இணைந்து இக்கிராமத்துக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்கத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளன.

அந்தத் திட்டம் மலேஷிய கிறீன்ரவுண் ரோட்டறிக் கழகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டத்தை முழுமனதுடன் வரவேற்று, அத்திட்டப்படி அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவிகளை வழங்கியுள்ளது.

இலங்கையில் இயங்கும் ரோட்டறிக் கழகங்களைத் தரிசிப்பதற்காக வந்த குழு கடந்த சனியன்று யாழ்ப்பாணத்துக்கும் வந்தது.

மலேஷிய கிறீன்ரவுண் ரோட்டறிக் கழகத்தின் தலைவர் பிண்டி ராஜசேகரன் தலைமையில் வந்த இக்குழுவில் மலேஷிய 3300 மாவட்டத்தின் முன்னாள் ஆளுநர் டாக்டர் ஆர். ரி. அரசம் இடம்பெற்றிருந்தார்.

மலேஷியாவில் இயங்கும் மெற்றோ ஐபோ, குவாலா காஞ்சர், குவாலா லம்பூர், பிறிக் பீல்ட், கொலானா ஜயா, மெல்வரி மலேஷியா ஆகிய கிளைக் கழகங்களின் உறுப்பினர்கள் இக்குழுவில் அங்கம் வகித்திருந்தனர்.

பெரிய பொக்கணைக்குச் சென்ற இக்குழுவினர் அக்கிராம மக்களுடன் நட்புறவுடன் பழகி அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்தனர். அன்புடன் அவர்களுடன் அளவளாவி அவர்களின் குடும்பநிலை, அவர்களின் கடந்தகால வாழ்க்கைப் பாதிப்பு போன்றவற்றை அறிந்தனர்.

அங்குள்ள குடும்பங்களில் சகல உறுப்பினர்களுக்கும் உடுபுடைவைகள் வழங்கினர்.

அங்குள்ள குடும்பங்களில் 45 குடும்பங்களுக்கு சூரியசக்தி மூலம் இயங்கும் மின்கலங்களை அன்பளிப்புச் செய்தனர். ஒவ்வொரு மின்கலமும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியுடையன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்தக் கிராமத்தில் 10 மலசல கூடங்களையும் இரு கிணறுகளையும் அமைக்க இக்குழுவினர் நிதி உதவி வழங்கினர். இந்த திட்டத்துக்கு 70 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தனர்.

இந்த உதவிகளைப் பெற்ற இந்தக் கிராம மக்கள் தமது நன்றியைத் தெரிவித்தனர்.

இதையடுத்து இக்குழுவினர் சுன்னாகத்தில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கியிருக்கும் சபாபதி முகாமுக்குச் சென்றனர். அங்குள்ள நிலைமைகளைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.



'தாயகம்' சிறுவர் இல்லத்தில் மலேஷியக் குழுவினர்

அந்த முகாமில் உள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளை இனங்கண்டு, அது தொடர்பான செயற்றிட்டம் ஒன்றைத் தயாரித்து தமது கழகத்துக்கு அனுப்பினால் உதவி செய்ய நடவடிக்கை எடுப்போம் என குழுவினர் தெரிவித்தனர்.

### குகானந்தி

கடந்த கால அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பராமரிக்கும் 'தாயகம்' சிறுவர் இல்லத்துக்கு இக்குழுவினர் சென்று அங்குள்ள சிறுவர்களுடன் கலந்துரையாடினர்.

அன்று இரவு யாழ். ரோட்டறிக் கழகப் பிரதிநிதிகளை 'உதயன்' கேட்போர் கூடத்தில் இக்குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ். ரோட்டறிக் கழகத்தின் செயற்பாடுகளையும் கடந்தகால நிகழ்வுகளையும் மக்களின் அன்றாடமான வாழ்க்கை நிலைகளையும் குழுவினர் கேட்டறிந்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய குழுவின் தலைவரான பிண்டி ராஜசேகரன் பெரிய பொக்கணைக் கிராமத்துக்கு மேற்கொண்ட விஜயத்தை நினைவுபடுத்தினார்.

"இன்றைய நாள் எமது மனத்திற்கு மகிழ்வு தரும் நாளாகிறது. நீண்டகாலம் எதிர்பார்த்த விடயம் இன்று நிஜமாகியுள்ளது. இதுவரை கற்பனையில் இருந்தது இன்று நனவாகியுள்ளது.

"இருள் நிலையில், அடிப்படை வசதிகள் இன்றி வாழும் மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் தரிசிக்க ஏற்பாடு செய்த யாழ். ரோட்டறிக் கழக ரோட்டறியன்களுக்கு எமது நன்றிகள்.

"யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டதையும் பெரிய பொக்கணைக் கிராம மக்களின் உபசரிப்பையும் அவர்களின் விருந்துபசாரத்தையும் எம்மால் மறக்கமுடியாது. எமது வாழ்க்கையில் இங்கு மேற்கொண்ட விஜயத்தை நோக்கும் போது நாம் அதிர்ஷ்டசாலிகள்தான்" - என்று அவர் தெரிவித்தார்.




'உதயன்' கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வில்....

## அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியருக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.1

யாழ். குடாநாட்டிலுள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் இயங்கும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வும் கருத்தரங்கும் எதிர்வரும் 6ஆம் திகதி முதல் இருதினங்கள் நல்லை ஆதீனத்தில் இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ளன.

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், வேலணை, சாவகச்சேரி, பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கே இந்த செயலமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இதில் 6ஆம் திகதி இடம்பெறும் முதல்நாள் நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து 'அறநெறியே வாழ்வு' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதனும் - 'தெய்வத் தமிழ்' என்ற தலைப்பில் இந்துகலாசார திணைக்கள உதவிப்பணிப்பாளர் சிவாகமலிங்கமும் - 'சைவ சித்தாந்தம்' என்ற தலைப்பில் முன்னாள் அதிபர் சைவப்புலவர் க.செல்லத்துரையும் நிகழ்த்துவர்.

மாலை 3.30 மணிமுதல் 5.30 மணிவரை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான புராணபடனப் பயிற்சி வழங்கப்படும்.

7ஆம் திகதி இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் ஆசியுரையை சைவப்புலவர் வசந்தசாமி நிகழ்த்துவார்.

தொடர்ந்து தேவார இசைமணி இராதிருஞானசம்பந்தனின் பண்ணிசை இடம்பெறும்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கற்பித்தல் பயிற்சியை சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளையும், மாலை கட்டல் மற்றும் கோலம் போடுதல் ஆகியவற்றுக்கான பயிற்சிகளை இராமநாதன் கல்லூரி ஆசிரியர் கந்த. சத்தியதாசனும் வழங்குவார்.

நிகழ்வில் கலந்துகொள்வோருக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். (ஒ-5-152)

## மிதிவெடி அபாயம் பற்றி படையினர் விளக்கமளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.1

எழுதுமட்டுவாழ் தெற்கு வீடமைப்புத் திட்டப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மிதிவெடி பற்றிய விளக்கமளிக்கும் கலந்துரையாடலை 55 ஆவது படையணியின் கீழ் செயற்படும் பொறியியல் பிரிவினர் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பாக பலாலியில் உள்ள யாழ். பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

55ஆவது படையணித் தளபதியின் ஆலோசனைக்கமைய 552ஆவது படையணியின் மேற்பார்வையில் எழுதுமட்டுவாழ் தெற்கு வீடமைப்புத் திட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு மிதிவெடியினால் ஏற்படும் இடர், அதிலிருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வது தொடர்பான கருத்தரங்கு கடந்த 25ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவில் நிலைகொண்டுள்ள பொறியியலாளர் பிரிவினரால் நடத்தப்பட்டது.

அதேதினம் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு 3ஆவது காலாட்படை, 8ஆவது கவச வாகனப் படைப்பிரிவு, 3ஆவது தொண்டர் படை, விஜயபாகு பிரிவைச் சேர்ந்தவர்களின் உதவியுடன் உலர்உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் சுமார் 10 கிலோ அரிசி, செத்தல் மிளகாய், தேயிலை மற்றும் உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய சுமார் 190 பொதிகள் படையினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு அப்பிரதேச மக்கள் எழுதுமட்டுவாழ் தெற்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் துர்க்கை அம்மன் ஆலயக் குருக்கள் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



இராணுவத்தினர் நடத்திய மிதிவெடி அபாயம் குறித்த விளக்கக் கருத்தரங்கில் கலந்துகொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் நிகழ்வில் பங்குபற்றியோருக்கு படையினர் உலர் உணவுப் பொருள்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## சோடா குடிக்க வந்தவரால் தொலைபேசி அபகரிப்பு

### சாவகச்சேரியில் சம்பவம்

தென்மராட்சி,டிசெ.1

கடையொன்றினுள் 'சார்ஜ்' ஏற்றுவதற்காக மின்இணைப்பில் பொருத்தப்பட்டிருந்த 65ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி, சோடா அருந்தக் கடைக்கு வந்தவரால் அபகரிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

தொலைபேசி அபகரிக்கப்பட்ட விடயம் நகரப் பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான விதத்தில் நடமாடிய இளைஞர் ஒருவரை பொலிஸார் விசாரணை செய்தனர். அவர் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் சாவகச்சேரி மீன்சந்தைக்கு அருகில் உள்ள பற்றைக்குள்ளிருந்து தொலைபேசி மீட்கப்பட்டது.

அந்த இளைஞர் சாவகச்சேரி டெருடாவிலைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ தினத்தன்று காலை நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் பந்தலில் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றதாகவும் -

அப்போது குறிப்பிட்ட கடையில் சிப்பந்தியைத் தவிர்ந்த ஏனையோர் அஞ்சலி நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற வேளையில் சோடா அருந்த வந்த இளைஞரே தொலைபேசியைத் திருடியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-117)

### முதியோர் இல்லத்துக்கு புதிய கட்டடம்

கைதடி,டிசெ.1

கைதடி அரச முதியோர் இல்லத்தில் சகல வசதிகளும் கொண்ட புதிய கட்டடமொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. இக்கட்டடமானது வைத்தியசாலையின் அமைப்பில் திட்டமிட்டு அமைக்கப்பட்டு வருகின்றது. (ஒ-75)

### வருடாந்தத் திருவிழா

மல்லாகம் குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ளது. கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகிய திருவிழா திருப்பலிப் பூஜை எதிர்வரும் 3ஆம் திகதி நடைபெறவுள்ள பெருவிழா திருப்பலியுடன் நிறைவுபெறவுள்ளது. (ஒ-150)

## இறைக்கும் இயந்திரம் பழுது; மலக்கழிவகற்றுவதில் சிரமம்

### மாநகராட்சி வட்டாரம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.1

மலசலகூடக்குழிக் கழிவுகளை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபைத் தொழிலாளர்கள் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ். மாநகரசபைக் கட்டடத்தில இயங்கும் பொதுச்சுகாதாரப் பொறியியல் பகுதியினரால் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் உள்ள வீடுகள் உட்பட தனியார் இடங்களில் உள்ள மலக்கழிவுகள் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டு வந்தன.

தற்போது மலக்கழிவுகளை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனத்தில் இருக்கும் இறைக்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளது. இதனால் வாகனம்மூலம் மலக்கழிவுகளை அகற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தொழிலாளர்களே நேரடியாக மலக்கழிவுகளை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-7)

# திலங்க சுமதிபாலவை கைதுசெய்ய உத்தரவு

'ஸ்ரீ லங்கா கிரிக்கெட்' தலைவர் திலங்க சுமதிபாலவை கைதுசெய்யுமாறு சட்டமா அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார். இதையடுத்து திலங்க தலைமறைவாகியுள்ளார்.

தற்போது சிறையில் உள்ள பாதாள உலக நபர் ஒருவர் 1999ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளின்போது, போலியான கடவுச்சீட்டு மூலம் இங்கிலாந்துக்குச் செல்வதற்கு திலங்க சுமதிபால உதவினார் என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து திலங்கவை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் கடந்த வெள்ளியன்று உத்தரவிட்டார்.

இறுதியாக கடந்த வெள்ளியன்று காலை காலியில் திலங்க சுமதிபால காணப்பட்டார். அதன் பின் கைது உத்தரவு குறித்த தகவலையடுத்து அவர் தலைமறைவாகிவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோடீஸ்வர வர்த்தகரான திலங்க சுமதிபால ஸ்ரீலங்கா ரெலிகொம்மின் தலைவராகவும் பதவி வகிக்கிறார்.

இதேவேளை, திலங்க சுமதிபால தம்மீதான குற்றச்சாட்டை மறுத்து அறிக்கையொன்றை விடுத்துள்ளார். தாம் ஒளிந்துகொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

"ஸ்ரீலங்கா கிரிக்கெட்" ஊடாகவே மேற்படி அறிக்கை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ள தருணத்தில் இந்தக் கைது உத்தரவு விடுக்கப்பட்டுள்ளமை அதன் உண்மையான நோக்கம் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

குறித்த பாதாள உலக நபருடன் எனக்கு தொடர்பு உள்ளதென்ற குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுக்கின்றேன்.

இவ்விவகாரத்தை நான் நீதிமன்றத்தில் எதிர்கொள்வேன். நான் ஒளிந்து கொள்ளவில்லை. எதிர்வரும் வாரத்தில் நான் நீதிமன்றத்துக்குச் செல்வேன்."

- இவ்வாறு திலங்க சுமதிபால மேற்படி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# ரஸாக்கின் அபார ஆட்டத்தால் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி

நியூஸிலாந்து அணியுடனான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. நேற்றுமுன்தினம், பாகிஸ்தானின் ராவல்பிண்டி நகரில் இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் நியூஸிலாந்து அணித்தலைவர் கிறிஸ் கெய்ன்ஸ் வெற்றிபெற்றார். அதையடுத்து நியூஸிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 291 ஓட்டங்களைப் பெற்றது அவ்வணி. கிறிஸ் கெய்ன்ஸ் 51 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 5 பௌண்டரிகள் உட்பட ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைப் பெற்றார். பாகிஸ்தான் பந்து வீச்சாளர்களில் சபீர் அஹமட், அப்துல் ரஸாக் இருவரும் தலா இரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 43.3 ஓவர்களில் 227 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 3 விக்கெட்டுகளை இழந்தது. எனினும், அப்துல் ரஸாக், மொஹமட் சமி இருவரும் மேலதிக 4.3 ஓவர்களில் 65 ஓட்டங்களைப்பெற்று அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினர்.

ரஸாக் 22 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களைப்பெற்று சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

## விளையாட்டு

மொஹமட் சமி 8 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 17 ஓட்டங்களைப் பெற்றார். இப்போட்டியில் நியூஸிலாந்து அணியின் சார்பாக 6 வீரர்கள் சர்வதேச கிரிக்கெட்டிற்கு அறிமுகமாகின என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய சிறார்களுக்கு பயிற்சியளிப்பதில் வெறுப்பு இல்லை என்கின்றார் அக்தார்



"இந்திய சிறார்களுக்கு வேகப் பந்து வீச்சுப் பயிற்சியளிப்பதில் எனக்கு வெறுப்பு ஏதும் கிடையாது."

- இவ்வாறு உலகின் அதிவேகப் பந்துவீச்சாளரான செஹைப் அக்தார் தெரிவித்துள்ளார்.

இந்திய வீரர்களுக்கு பாக். அணியின் முன்னாள் தலைவரான வஸிம் அக்ரம் பயிற்சியளிக்கவுள்ளார் என்ற செய்தி பாகிஸ்தானில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இவ்வாறான முயற்சியைத் தடுக்க வேண்டுமெனக்கோரி இரு வழக்குகளும் தாக்கல்செய்யப்பட்டன.

ஆனால், இந்தியாவின் சிறந்த வேகப்பந்து வீச்சாளரை உருவாக்குவதற்காக அந்நாட்டு சிறார்களுக்கு பயிற்சியளிப்பதில் தமக்குத் தயக்கம் கிடையாது என்கிறார் சொஹைப் அக்தார்.

"எனது திறமையைச் சிறார்களுக்கு அளிக்க நான் விரும்புகிறேன் அதில் எனக்குத் தயக்கம் கிடையாது.

எமது சிறார்களை துடுப்பாட்ட வீரராக்குவதற்கு சச்சின் டெண்டுல்கர் உதவ முடியும்.

இந்தியா சிறந்த வேகப்பந்து வீச்சாளரைப் பெறுவதற்கு என்னால் உதவமுடியும்.

இரு நாடுகளுக்கும் இடையில் பஸ் சேவையை நடத்த முடியுமானால், விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடியுமானால், கிரிக்கெட் வீரர்கள் ஏன் இரு நாடுகளுக்கும் தூதுவர்களாக இருக்க முடியாது?

- இவ்வாறு இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அக்தார் கூறியுள்ளார்.

"பெரியதொரு நாடாக இருந்த போதிலும், இந்திய அணியில் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் இல்லாதிருப்பது ஆச்சரியமளிக்கிறது.

இவ்வளவு பெரிய நாட்டில் இரு வேகப்பந்து வீச்சாளர்களாவது இருந்திருக்க வேண்டும்."

சச்சின் டெண்டுல்கர் இந்தியாவின் மிகச்சிறந்த வீரர். கிரிக்கெட் வரலாற்றின் சிறந்த வீரர்களில் அவரும் ஒருவர்.

இந்திய அணியில் அவரும் ஒருவர். இந்திய அணியில் மேலும் பல சிறந்த வீரர்கள் உள்ளனர்.

திராவிட் சிறந்த தொழில்நுட்பத்துடன் விளையாடுவார். சுழற்பந்து வீச்சுகளை கங்குலி சிறப்பாக எதிர்கொள்வார். வீரேந்தர் ஷேவாக்கும் சிறந்த வீரர்தான்."

- இவ்வாறு அக்தார் மேலும் கூறினார்.

# சௌரவ் கங்குலி வாக்குறுதியை மீறிவிட்டார் விக்டோரிய அணி பயிற்றுநர் குற்றச்சாட்டு!

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி, தாம் அளித்த வாக்குறுதியை மீறிவிட்டார் என ஆஸ்திரேலியாவின் விக்டோரிய மாநில அணி பயிற்றுநர் டேவிட் ஹுக்ஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

இரு அணிகளுக்கும் இடையே நடந்து முடிந்த 3 நாள் போட்டி விறுவிறுப்பற்று முடிந்ததற்குக் காரணம் கங்குலியின் அணுகுமுறையே என்று குற்றம் சாட்டியுள்ளனர்.

போட்டி ஆரம்பிப்பதற்கு முன் எந்த அணி துடுப்பெடுத்தாடினாலும் 70 ஓவர்களே விளையாடுவது என்ற ஒப்பந்தத்தை கங்குலி மீறிவிட்டார் என்கிறார் ஹுக்ஸ்.

அதாவது, "நாணய சுழற்சியில் வென்ற பிறகு கங்குலி, ஹுக்ஸிடம் இது முதல் பயிற்சிப்போட்டி. ஆகவே, நாங்கள் முழுதும் துடுப்பெடுத்தாட முடிவுசெய்துள்ளோம்" என்று கூறினார்.



70 ஓவர்கள் தாண்டியவுடன், இந்திய பின் வரிசை வீரர்கள் சரியாக ஆடவில்லை. ஆனால், ஓவர்கள் மட்டும் கரைந்தன. இது எங்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.

"இவர்கள் கிரிக்கெட் விளையாட கற்றுக்கொள்ளவில்லை. போட்டியை இவர்கள் வலைப்பயிற்சியாகவே அணுகுகின்றனர்.

குயின்ஸ்லாந்து அணிக்கு எதிராக அடுத்த போட்டியிலும் இவர்கள் இதே அணுகுமுறையைக் கையாண்டால், இவர்கள் கற்றுக் கொள்வது கடினம்" - என்றார் ஹுக்ஸ்.

# உலகக் கிண்ணத் தொடரில் ஒரு இறுதிப்போட்டிதான்

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணத் தொடரில் 3 இறுதிப் போட்டிகளை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் நிராகரித்துள்ளது.

இறுதிப் போட்டிகளுக்குத் தெரிவாகும் அணிகள் மூன்று தடவை மோத வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. ஐ.சி.சி. பிரதம நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட்டும் இதற்கு ஆதரவளித்தார்.

எனினும், இதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை என மல்கம் ஸ்பீட் அறிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் 16 அணிகள் பங்குபற்றவுள்ளன.

இவ்வணிகள் 4 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஆரம்பச்சுற்றுப் போட்டிகள் நடத்தப்படும்.

ஒவ்வொரு குழுவிலும் முதலிரு இடங்களைப்பெறும் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தெரிவாகும்.

அதிலிருந்து 4 அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகும்.

இத்தொடரில் மொத்தமாக 51 போட்டிகள் நடத்தப்படும்.

அமெரிக்காவிலும் ஒரு சில போட்டிகள் நடத்தப்படலாம்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு அருகில் உள்ளமையாலும் விளையாட்டுத் துறையில் அதிக ஆர்வமுள்ள நாடென்ற வகையிலும் உலகக் கிண்ணப்போட்டிகளை நடத்துவதற்கு அமெரிக்காவுக்கு வாய்ப்பு உள்ளது."

- இவ்வாறு ஸ்பீட் கூறினார்.


## உளம் கனிந்த பாராட்டுக்கள்



காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட வ.பி.போ.ச. சிரேஷ்ட சாலைப் பரிசோதகரும், தேசிய ஊழியர் சங்க அமைப்பாளரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய

திரு.செல்வரத்தினம் செல்வராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரை நாம் மகிழ்ச்சியோடு உளமாரப் பாராட்டுகிறோம். அவர் தொடர்ந்தும் சமூகசேவை செய்திட இறைவன் திருவருட்கடாட்சம் அவருக்குக் கிடைக்கட்டும்.

காரைநகர். Dr.S.சிவனேசன் குடும்பத்தினர்.

GREEN CARDS

VISA - லொத்தர்

USA Apply Soon

※ குடும்பத்துடன் அமெரிக்கா செல்லும் அதிர்ஷ்ட வாய்ப்பு.
※ போட்டியில் பங்குபற்ற போட்டோ மட்டுமே போதுமானது. (Size 2"x2" பாஸ்போட் அளவு)
※ Digital முறையில் Internet மூலம் (Electronic Application) விண்ணப்பத்தைத் தயாரித்து அனுப்புவோம்.

உடனே ரூபா 300/= இற்கான காசுக்கட்டளை (Money Order) போட்டோக்களுடன் கீழ்க்குறிப்பிட்ட விவரங்களை தெளிவாக எமக்கு அனுப்பி வைக்கவும்.

சில வாரங்களே! முந்துங்கள்!!

விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:
விலாசம்:
பிறந்த திகதி:
பிறந்த இடம்:
மனைவி / பிள்ளைகள் பெயர்: போட்டோ
பிறந்த திகதி:
பிறந்த இடம்:
பால்:
போட்டோக்கள்:

இம்முறை விண்ணப்பம் Internet மூலம் மட்டுமே!

Penguin Book Shop,
5/30, Super Market,
Colombo-13. Tel.:4615977.

Computerized Accounting By TATA Consultancy Services, India

NEXT EX GENERATION

New Batch Commences :06.12.2003

Classes for Certification Program in Computerized Accounting EX – Next Generation is starting on 06.12.2003 at 10.00 A.M.

Those who are interested to follow this are requested to effect their registration before 5th December 2003.

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
# 100, Clock Tower Road, Jaffna.
Tel : 021 222 2831

U.K., U.S.A., CANADA ஆகிய நாடுகளிற்கான வதிவிட அனுமதி விண்ணப்பப்படிவம்

- Canada Immigration Visa Application Form.
- U.K. Visa Application Form ஆகியவற்றை இங்கே பெற்றுக்கொள்வதுடன்,
- U.S.A. Green Card விண்ணப்பப்படிவங்களையும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பிக்கொள்ளலாம்.

(விண்ணப்ப முடிவு திகதி:- 30.12.2003)

இத்துடன் மேலதிக விவரங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விசிற்ரோக். நெற்.
315A, 1ஆம் மாடி,
பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி.

VISITALK.NET,
T.P.:-222 6637,
222 7387.

படிவம்

★ அரசாங்க பாடசாலைகளின் இடைநிலை தரங்களில் பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கான பட்டதாரிகளைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் விற்பனையாகின்றது.

★ வடகிழக்கு மாகாண அரச தமிழ் மொழிப் பாடசாலைகளுக்கு தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவமும் விற்பனையாகின்றது.

விண்ணப்ப முடிவு திகதி: 31.12.2003.

BHARATHI PATHIPPAKAM
OFFSET PRINTERS
430, K.K.S. ROAD,
JAFFNA.

உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களுக்கும் உங்களை நினைவுபடுத்தவென

தெரிவுசெய்யப்பட்ட 300 வகைகளுக்கு மேற்பட்ட கலண்டர்களும், 100 வகைகளுக்கு மேற்பட்ட விசிட்டிங் காட் வகைகளுக்கும் 30 க்கு மேற்பட்ட டயரி வகைகளுக்கும் மற்றும் அவற்றில் உங்கள் நிறுவனத்தின் விளம்பரத்தை அழகாக அச்சிட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

அச்சுப் பதிப்பின் நாயகம்

சிமாட் பிறிண்டேர்ஸ்

இல. 717, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

## இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு:

# முஸ்லிம் விவகாரத்தில் காட்டும் அசமந்தம் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தூண்டலாம்!

### சென்னை நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் எச்சரிக்கை

கொழும்பு,டிசெ.1

இனப்பிரச்சினைத்தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் மக்களின் பரிமாணம் சரிவர கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படாவிட்டால் முஸ்லிம் இளைஞர்கள் ஆயுதமேந்தவேண்டிய நிலை ஏற்படலாம்.



-இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் எச்சரித்துள்ளார்.

சென்னை நகரில் அவதானிகள் ஆய்வுமன்றத்தில் நேற்று "இலங்கையின் இனப்பிரச்சினையும் முஸ்லிம்களும்'' என்ற தொனிப்பொருளில் அமைச்சர் ஹக்கீம் உரையாற்றினார்.

அங்கு உரையாற்றுகையில் இலங்கையில் இனப்பிரச்சினையின் விளைவாக தமிழர் சமூகத்திற்கு எந்த விதத்திலும் குறையாதவாறு முஸ்லிம் சமூகமும் உயிரிழப்புக்களையும் பொருள் சேதங்களையும் ஏனைய பாதிப்புக்களையும் அனுபவித்து வருவதாக கூறிய அமச்சர் ஹக்கீம், சமாதான முன்னெடுப்புகளில் முஸ்லிம்களும் சமபங்காளிகளாக கலந்துகொள்ளவேண்டுமென்பதில் எந்தவிதமான விட்டுக்கொடுப்பிற்கும் இடமில்லை என்றார்.

சமாதான பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் என விடுதலைப் புலிகளின் தலைமைத்துவம் அளித்த வாக்குறுதியையும் உத்தரவாதத்தையும் நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் காட்டிவரும் அலட்சியப் போக்கையிட்டு தாம் விசனம் அடைவதாக ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினையின் தோற்றத்திற்கு வித்திட்ட காரணிகளை எடுத்து விளக்கிய அமைச்சர் ஹக்கீம், பின்னர் அவை பூதாகரமாக உருவெடுத்ததன் விளைவாக ஏற்பட்டுள்ள அவலங்களையும் இழப்புக்களையும் அழிவுகளையும் விவரித்தார்.

முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்தி விட்டு, இலங்கையில் எந்தவொரு சமூகமும் சமாதானத்தின் உண்மைப் பயன்களை தனியாகவும் முற்று முழுதாகவும் நுகர முடியாது என்றும் அவர் கூறினார்.

இவ்வளவு காலமாக முஸ்லிம்கள் ஆயுதம் ஏந்துவதை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தடுத்து, உரிமைகளை ஜனநாயக ரீதியாக வென்றெடுப்பதிலேயே அவர்களை நெறிப்படுத்தி வந்துள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர் ஹக்கீம், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளில் முஸ்லிம்களின் பரிமாணம் சரிவரக்கவனத்தில் கொள்ளப்பட்டு நீதி நியாயம் கிட்டாது போனால் விரக்தியின் விளிம்பில் நிற்கும் முஸ்லிம் இளைஞர்கள் தற்பாதுகாப்பிற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைமைக்கு இயல்பாகவே தள்ளப்படுவர்கள் அதைத் தவிர்க்க முடியாது போய்விடலாம் என்றும் எச்சரித்தார். அப்பாவி முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட்டாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிகழ்வுக்கு தமிழக தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் பெருந்திரளானோர் வந்திருந்தனர். இலங்கையில் முன்னர் கடமையாற்றிய இந்திய அமைதிப்படையின் ஓய்வுபெற்ற உயரதிகாரிகள் சிலரும், தமிழக மற்றும் மத்திய அரசு நிர்வாக சேவை அதிகாரிகளும், ஏராளமான ஊடகவியலாளர்களும் சமுகமளித்திருந்தனர்.


**உடன் தேவை - பில் கிளாக்**

45 வயதிற்கு மேற்பட்ட பில் கிளாக் (ஆண்கள்) உடன் தேவை.

தொடர்பு:-

**சரஸ்வதி விலாஸ், 195(57), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.**

(25281)(31-12-17)



**தவறிவிட்டது**

17A, சிவன் புதுவீதி, நல்லூரைச் சேர்ந்த கந்தையா மகேந்திரம் என்பவரின் தேசிய அ.அ. (500 654554V), விசேட அ.அ., முக்கிய ஆவணங்கள் என்பன 29/11 அன்று சிவன் கோயில் சந்திக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் கொடுத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(25280)(31-12-17)


# கிண்ணியாவில் அசம்பாவிதம் இல்லை; மக்கள் வேறு இடங்களில் தஞ்சம்

கன்னியா,டிசெ.1

கிண்ணியாவில் நேற்று அமைதி நிலவியதாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் மாலை 6 மணி முதல் அங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்றுக்காலை ஆறு மணிக்கு நீக்கப்பட்டது.

ஊரடங்கு நீக்கப்பட்ட பின்னர் அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. ஆயினும், பதற்றம் நிலவியது.

கிண்ணியா, நடுஊற்றுக் கிராமத்தில் இரவு நேர வயல் காவலுக்குச் சென்ற மூவர், வெள்ளியிரவு இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் காரணமாகவே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது.

கொலைசெய்யப்பட்டவர்களின் சடலங்கள் நேற்றுமுன்தினம் காலை மீட்கப்பட்டன. சடலங்களில் வெட்டுக் காயங்கள் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நாகூர் பிச்சை பளீஸ் (வயது58), அப்துல் முத்தலிவ் சுபைர் (வயது50), முகமட் ஹுசைன் வயது (58) ஆகியோரே வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தை அடுத்து கிண்ணியா பொலீஸ் பிரிவில் ஏற்பட்ட பதற்றத்தைத் தணிப்பதற்காக பொலீஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பகுதிக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கும்படி ஜனாதிபதி பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கிடையே, சின்னக்கிண்ணியா பகுதியில் இருந்து வெளியேறிய 40 தமிழ் குடும்பங்கள் திருகோணமலை அன்புவழிபுரம், கலைமகள் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான உதவிகளை உள்ளூர் மக்கள் வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, கிண்ணியா சம்பவங்களால் அச்சமடைந்த முஸ்லிம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து கிண்ணியா அலிகார் வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர் என்று பிரதேச செயலாளர் ஷெரீப் தெரிவித்தார். உறவினர், நண்பர்களின் இல்லங்களிலும் பல குடும்பங்கள் சென்று தங்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது.

### பாடத்திட்டங்கள் விநியோகம்

வலிகாமம்தெற்கு,டிசெ.1

2004ஆம் ஆண்டு ஆறாம் தர மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்துக்குரிய சுற்றாடல் கல்வி, கணிதம், ஆங்கிலம், தமிழ் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் கை நூல்கள், பாடத்திட்டங்கள் என்பன வலிகாமம் கல்வி வலயத்துக்கு கிடைக்கப்பெற்று, அந்தந்த கோட்டக் கல்வி பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஒ-152)

### நெசவுப் பயிற்சி

கொக்குவில்,டிசெ.1

நெசவுப் பயிற்சி வகுப்புகளை ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறியில் சேலை வடிவமைப்பு, நிறப் பொருத்தமும் காலத்திற்கேற்ப நிறத் தெரிவுகள், இயற்கைச் சாயங்கள் மூலம் சாயமிடுதல், தரமான சாயமிடல் ஆகிய பயிற்சிகள் இடம்பெற உள்ளன. (ஒ-76)


**புத்திசாலித்தனமான ஆசிரியத் தெரிவே உங்களை மீட்சிக்குரியவராக்கும்**

**BARATHY** கல்வி நிறுவனம் சித்தன் கேணி

**தரம் 5 முதல் 11 வரை**

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்:

06-12-2003 சனிக்கிழமை 8 மணி

எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம்: | திரு. தேவா | திரு. பாலச்சந்திரன் |
| கணிதம்: | திரு. சிவரூபன் | திரு. சிவா |
| தமிழ்: | திரு. குகபரன் | திரு. தமிழ்மாறன் |
| சமூகக்கல்வி: | திரு. சுதன் | திரு. சிவபாலன் |
| ஆங்கிலம்: | திரு. விஜயபாஸ்கர் | திரு. திவாகர் |
| சமயம்: | திரு. தரன் | |
| வர்த்தகம்: | திரு. லோகேஸ்வரன் | |
| தமிழ் இலக்கியம்: | திரு. குகபரன் | |

**தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பு**

திரு. கலாமோகன்

★ குறிப்பு:- மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு எந்த கல்வி நிறுவனத்திலும் கற்பிக்கமாட்டார்கள்.

★ சென்ற ஆண்டுகள் போல் இவ்வாண்டும் ஒவ்வொரு வகுப்பிலும் 70 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும்.

★ இன்று 01.12.2003 இலிருந்து உங்கள் அனுமதியைப்பெற்று உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

(25277)(36-31-12-17)



**நிறைஞ்சனாஸ்**

விஜய், ஜோதிகா நடித்த

**திருமலை**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)

**2 FAST 2 FURIOVS**

(C-31610) (12)

**லிபேட்டி** அச்சுவேலி

இன்று முதல் விக்ரம், ஜோதிகா, ரீமா சென், விவேக் நடித்த

**தூள்**



காட்சிகள்: 3.00, 7.00. (பி.நே)

(C/31234)

**நாகம்ஸ்** சுன்னாகம்

**பார்த்திபன் கனவு**



**லஷ்சுமி சினிமா** இணுவில்

விஜய், ம(ா)திகா, விவேக், மோனல் இன்னும் பலர் நடிப்பில்

**பத்ரி**



காட்சி நேரம்: 10.30, 3.30, 6.30. (பி.நே.)


# மரண அறிவித்தல்கள்

### நாகமணி நடராசா (கற்றன்)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு இராமகிருஸ்ண வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி நடராசா (கற்றன்) நேற்று (30.11.2003) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - இராசம்மா தம்பதிகளின் மகனும் தர்மபூபதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முத்தையா மற்றும் நல்லமுத்து தம்பதிகளின் மருமகனும் அருந்ததி, தர்மராஜா, சுகந்தினி, புஸ்பராஜா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமகிருஸ்ண வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
*T.P: 021-222 6805.*

தகவல்,
**மனைவி, பிள்ளைகள்.**

(25282)(31-12-17)

### திருமதி அருளானந்தம் பரமேஸ்வரி

வியான்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கந்தரோடையில் வசித்துவந்தவருமாகிய பரமேஸ்வரி அருளானந்தம் நேற்று (30.11.2003) காலை காலமானார்.

அன்னார் அருளானந்தம் (முன்னாள் நீர்வேலி ப.நோ.கூ.ச. லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - ராசம்மா ஆகியோரின் அன்பு மகளும் உரும்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பாப்பிள்ளை - சின்னம்மா ஆகியோரின் மருமகளும் பிரதீபாவின் (யாழ். நுண்கலைப் பிரிவு 2ஆம் வருட மாணவி) அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான திருமதி ராஜேஸ்வரி, கந்தரேஸ்வரி, சண்முகதாசன் மற்றும் முருகதாஸ் (நில அளவையாளர், வவுனியா) ஆகியோரின் சகோதரியும், சண்முகநாதன், யோகேந்திரம், விமலா, வசந்தாதேவி, தங்கலட்சுமி, பராசக்தி காலஞ்சென்றவர்களான அகிலாண்டேஸ்வரி, இராசரத்தினம், ராஜேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் விஸ்ணுகாந்தன் (U.K.), கம்சா, சாந்தன், கிருஸ்ணா ஆகியோரின் சித்தியும் சஞ்சு, சரண், சஞ்சீவ், சிறீஸ்கந்தராசா, புவனேந்திரன, பவா, விநாயகன், கோபாலன், முருகவேள், பபி, மகாயோகேஸ்வரி, கலாமணி, பேபி, நந்தினி, இந்துமதி, சசி, ரஜனி, மகிமா, அனுஷா, துளசி, ஜெகன், பிரியதர்சினி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2003) திங்கட்கிழமை சுப்பிரமணியம் வீதி கந்தரோடையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 10 மணிக்கு இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கடபுலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.*

தகவல்,
**த. அருளானந்தம் (கணவர்).**

(C-31655)(31-12-17)

### திருமதி இராசலிங்கம் மரகதவல்லி

வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் மரகதவல்லி நேற்று (30.11.2003) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தெய்வானைப்பிள்ளையின் அருமை மகளும் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும் யாழினி (கைதடி நவில்ட் பாடசாலை), தயாளினி (யாழ். பல்கலைக்கழகம்), ஜெயயாழினி (யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர்), யாழ்கரன், தீபதயாழினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 01.12.2003 பிப. 2.00 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இந்துக் கல்லூரி வீதி,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்,
**யாழ்கரன் (மகன்).**

(25283)(31-12-17)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிராமத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய

**செயல் வீரன்**

**உயர்திரு. இ. ஸ்ரீதாமோதரராஜா (ஸ்ரீராஜ்)**

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அவரை பாராட்டி வாழ்த்துவதோடு, அவரின் சேவைகள் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

வட்டு. கிழக்கு இளைஞர்களும், தாவளை சனசமூக நிலையமும்.

(25279)(31-12-17)

# சங்கரியின் தலைமைக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் அரைமணி நேரம் வழமையான விடயங்களை ஆராய்ந்த மத்திய குழுவின் கவனம், பின்னர் ஆனந்தசங்கரிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை பக்கம் திரும்பியது. பிரேரணையை ஒட்டியும் வெட்டியும் பலர் கருத்துக் கூறினர்.

திருகோணமலையிலிருந்து வந்திருந்த ஈழத்துநாதன், சச்சிதானந்தன், வவுனியாவைச் சேர்ந்த மூர்த்தி, யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருந்த முன்னாள் மேயர் கந்தையன், முன்னாள் மாநகரசபை உறுப்பினர் அரவிந்தன் மற்றும் முகுந்தன் போன்றோர் ஆனந்தசங்கரிக்கு ஆதரவாகக் கருத்துக்கூறினர்.

இணைப்பொருளாளர்களில் ஒருவரான எஸ்.தியாகராஜா (எஸ்.ரி.ஆர்.) போன்ற ஒருசிலர் நடுநிலையை வகித்தனர்.

ஆனால், கூட்டணியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்கள் அனைவரும் - செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் எம்.பி., சிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி., நிர்வாகசெயலாளர் என்.ரவிராஜ் எம்.பி. , இணைப் பொருளாளர் மாவை சேனாதிராஜா எம்.பி. ஆகியோர் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் எஞ்சிய உறுப்பினர்கள் அனைவரும் - ஆனந்தசங்கரிக்கு எதிராகவே கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால், விவாதம் காரசாரமாக நீண்டநேரம் தொடர்ந்து, வாக்குவாதம் சூடுபிடித்தது. சுமார் 7 மணிநேரம் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களின் முடிவில் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்திருந்த உறுப்பினர் குலதேவநாயகம், ஆனந்தசங்கரிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வடிவத்தை முன்மொழிந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் அது அங்கம் வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் மக்கள் அளித்த ஆணைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதன் மூலம் கட்சிக்கு எதிராக இயங்கி கட்சியை மிக இக்கட்டான நிலைக்கு உட்படுத்தியிருக்கின்றார் தலைவர் வீ. ஆனந்தசங்கரி. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழர் கூட்டணிக்கும் இடையில் மலர்ந்திருக்கும் புரிந்துணர்வை சீரழிக்கும் வகையில் அவர் நடந்து கொள்கிறார். எனவே, அவர் மீது நம்பிக்கையில்லை என இந்த மத்திய குழு தீர்மானித்திருக்கிறது. என்ற பிரேரணையை அவர் முன்மொழிந்ததும் அதற்கு எதிராக உறுப்பினர் ஈழத்துநாதன் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றைக்கிளப்பினார். இந்த நம்பிக்கையில்லாப்பிரேரணையை இந்த மத்திய குழு கவனத்தில் எடுக்கமுடியாது என்றார் அவர்.

தலைவரையோ, ஏனைய பொறுப்புள்ள ஓர் உறுப்பினரையோ விலக்கும் அதிகாரம் பொதுச்சபைக்கே உண்டு என்றும் அவர் வாதிட்டார்.

இச்சமயம் எழுந்த செயலாளர் சம்பந்தன், ஆறு ஏழு மணிநேரம் இந்த விடயம் குறித்த விவாதம் நடந்து முடிந்த நிலையில் ஒருமுடிவு எட்டப்படவேண்டிய சமயத்தில் இத்தகைய ஒழுங்குப் பிரச்சினையை இப்போத கிளப்புவதில் அர்த்தமில்லை. ஆரம்பத்தில் அதுகுறித்து பிரச்சினை கிளப்பியிருந்தால் அப்போது அது பற்றிப் பார்த்திருக்கலாம். அத்தோடு தமது கூட்டத்துக்குத் தலைமை வகிப்பவர் மீது தங்களுக்கு நம்பிக்கை உண்டா, இல்லையா என்பதை தீர்மானித்து வெளியிடும் அதிகாரம் அந்தக்கூட்டத்துக்கும் அதில் பங்குபற்றும் உறுப்பினர்களுக்கும் உண்டு. அதை எந்த விதியோ, யாப்போ தடுக்க முடியாது என்றார்.

இந்தப்பிரேரணையை மட்டக்களப்பில் இருந்து வந்த கட்சியின் உபதலைவரும் கட்சியின் நீண்டகால மூத்த உறுப்பினருமான கே.செல்லதம்பி வழி மொழிந்த நிலையில் அதற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் எழுந்து நிற்கும்படி இரா.சம்பந்தன் கேட்டுக்கொண்டார். 25பேர் எழுந்து நின்று ஆதரவு தெரிவித்தனர். அவர்களின் சம்மதத்தை கையொப்பத்தோடு பெற்றுக் கொள்ளும்படி செயலாளர் நாயகம் கேட்டுக்கொண்டதை அடுத்து நிர்வாகச் செயலாளர் ரவிராஜ், பிரேரணைக்கு ஆதரவு தெரிவித்த உறுப்பினர்களிடம் கையொப்பம் பெறத் தொடங்கினார். ஒவ்வொருவராக வந்து ரவிராஜிடம் இருந்த சம்பந்தப்பட்ட ஆவணத்தில் ஒப்பமிட்டுச் சென்றனர். அச்சமயம் ஆத்திரமுற்ற ஆனந்தசங்கரி அருகில் இருந்த ரவிராஜிடம் அந்த ஆவணப்பத்திரத்தை பறித்துக் கிழித்து எறிந்தார்.

கிழித்தெறிந்த பத்திரத்தின் துண்டுகளை ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் மனைவியும் மற்றொரு மத்திய குழு உறுப்பினரான சுகுணம் ஜோசப் பத்திரமாகப் பொறுக்கி தமது கைப் பைக்குள் வைத்துக்கொண்டார். பின்னர் அவரது கைப்பையை அவரிடமிருந்து பிடுங்க சில உறுப்பினர்கள் முயன்றதாகவும் ஒரு தகவல் வந்தது.

இந்நிலையில் நிலைமை மோசமடைந்ததை அடுத்து கூட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரித்தவர்கள் அதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தில் ஒப்பமிடுவதற்காக சிரேஷ்ட உப தலைவரான ஜோசப் பரராஜசிங்கம் எம்.பியின் வீட்டுக்குப் போய் ஒப்பமிட்டனர் என்பதை உறுதிப் படுத்த முடிந்தது.

கூட்டம் முடிந்து வெளியே வந்த சமயமே ஆனந்தசங்கரிக்கு ஆதரவாகத் திரண்டிருந்த சுமார் நாற்பது ஐம்பது பேர் ஆனந்த சங்கரிக்கு எதிராகக் கூட்டத்தில் நடந்து கொண்டவர்களை தாக்க முயன்றனர். கூட்டத்தில் ஆனந்த சங்கரியை ஆதரித்த ஒருசிலர் இந்தத் தாக்குதல் முயற்சியை - காடைத்தன நடவடிக்கையை முன்னின்று நடத்தியதையும் காணமுடிந்தது. (ஐ)

# சங்கரியின் தலைமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், மாவட்டக் குழுக்கள் என்பனவும் செயலிழந்து போன நிலையில் பொதுக்குழு என்ற அமைப்பை உடன் கூட்டக் கூடிய சாத்தியம் உள்ளதா என்பது கேள்விக்குறியே.

கூட்டணியின் மத்தியகுழு கூட எண்பதுகளில் செயலற்றுப் போக, 1983 இல் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் கூடி கட்சியை நிறுவனப்படுத்தும் முயற்சியாக மத்தியகுழு என்ற பெயரில் ஆள்களை - ஆதரவாளர்களை நியமித்து கட்சியை மீள உயிர்ப்பித்தனர். அந்த மத்திய குழுவே தற்போது செயற்படுகின்றது. அந்த மத்திய குழு தான் வீ.ஆனந்தசங்கரியை முன்னாள் தலைவர் எம்.சிவசிதம்பரம் காலமானதும் அவரது இடத்துக்குத் தலைவராக நியமித்து அந்த மத்திய குழுக்கூட முறையாகத் தெரிவுசெய்யப்பட்ட ஒன்று அல்ல.

எனினும், வீ.ஆனந்தசங்கரி விடயத்தில் அவரை தலைமைப் பதவியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்பதில் சிரத்தை கொண்டிருக்கும் கட்சிப் பிரமுகர்கள் அந்த நடிவடிக்கையைக் கவனமாகவும், எச்சரிக்கையுடனும் மேற்கொள்வதில் திட்டமிட்டு உறுதியாக இருக்கின்றனர் எனத் தெரிகின்றது. தங்கள் முயற்சியை சட்டத்துக்கும், கட்சி ஒழுங்கு முறைக்கும் அமைவாக மேற்கொள்வதில் அவர்கள் அதிகம் கரிசனை காட்டுகின்றனர்.

மத்திய குழுவில் நேற்று எடுக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம், கட்சித் தலைவர் பதவியிலிருந்து சங்கரியை நீக்குவதற்குப் போதியளவு வலுவுடையதல்ல என்பது அவர்களுக்குத் தெரியும்.

அத்தகைய மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டி வீ.ஆனந்தசங்கரிக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கைக்கு என ஒரு குழுவை நியமித்து, அக்குழுவின் விசாரணை மூலம் ஆனந்த சங்கரியை கட்சித் தலைமைப் பதவியிலிருந்தும் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கான சிபாரிசைப் பெற்றுக்கொள்வது என்றும் -

அதேசமயம், பிரதேச, மாவட்ட கிளைக் குழுக்களையும் அவை மூலம் பொதுக்குழுவையும் புனரமைத்து அந்தப் பொதுக்குழுவில் அந்த சிபார்சை நிறைவேற்றுவதன் மூலம் ஆனந்த சங்கரியை சட்ட முரண்பாடு ஏதுமின்றி கட்சியின் தலைமைப்பதவியிலிருந்து அகற்ற முடியும் என்றும் -

அவர்கள் கருதுகின்றனர் எனத் தெரிகின்றது.

எது எப்படியென்றாலும் இத்தகைய நடவடிக்கைகளை ஆகக் கூடிய விரைவில் மேற்கொண்டாலும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்தது மூன்று மாதங்களாவது தேவை.

- இப்படி அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விவகாரம் தொடர்பாகக் கட்சியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், பி.பி.ஸி. தமிழோசைக்குத் தெரிவித்த கருத்துக்களும் கவனிக்கத்தக்கவை.

"கட்சியின் தலைவர் மீது தங்களுக்கு நம்பிக்கையில்லை என்ற தீர் மானத்தை மட்டும்தான் மத்திய செயர் குழு எடுத்துள்ளது அவ்வளவு தான். அதற்கு மேல் எந்தத் தீர்மானத்தை யும் எடுக்கவில்லை.

"மத்திய செயற்குழுத் தலைவர் மீது தங்களது நம்பிக்கையீனத்தையும் தெரிவிப்பதற்கு முழு உரித்துண்டு."

- இப்படி சம்பந்தன் தெரிவித்துள்ளார். இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் ஆனந்தசங்கரி கட்சித் தலைவராக இனிமேல் இருக்க முடியாது என்றோ, கட்சித் தலைவராக செயற்பட முடியாது என்றோ அவர் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"சரி இதத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது இனி என்ன?" என்று கேட்டதற்கு - நம்பிக்கை இல்லை என்று செயற்குழு முடிவெடுத்த பின்னர் அவ்வாறு நம்பிக்கையை இழந்தவர் எதிர்காலத்தில் எந்த விதமாக நடந்து கொள்கிறார் என்பதில் தான் அது தங்கியுள்ளது - என்று சம்பந்தன் பதிலளித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# வாக்கெடுப்பு நடப்பதற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது விடயமாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் பரபரப்பான சூழ்நிலையில் காலை 10 மணிக்கு எனது தலைமையில் ஆரம்பமானது.

கூட்டம் சுமுகமாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், உறுப்பினர் ஒருவர் அங்கு ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்தார். தலைவருடன் கலந்தாலோசிக்காமல் மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளனர். அத்தகைய நிகழ்ச்சி நிரலின் அடிப்படை யில் நடந்து கொண்டிருக்கும் கூட்டம் செல்லுபடியாகுமா? என ஒழுங்குப் பிரச்சினையை அவர் முன்வைத்தார்.

இதற்குப் பதிலளிக்கப்படும் என செயலாளர்நாயகம் இரா.சம்பந்தனால் அறிவிக்கப்பட்டபோதும், அதற்கான பதிலை அவர் முன்வைக்காது நிகழ்ச்சிநிரலை ஒட்டி அவர் நீண்டதொரு உரையை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து, எதிரும்புதிருமான கருத்துக்கள் சபையில் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சபை உறுப்பினர் ஒருவரால் - தமிழர் விடுதலைக்கூட்டணி அமைப்புவிதி 11.6 இன்படி - தக்க காரணத்திற்காக கூட்டணியின் எந்தப் பதவியாளர் மீதும் மத்திய செயற்குழு உறுப்பினர் மீதும ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், அவரை பதவி நீக்கம் செய்யவும், உறுப்பு உரிமையிலிருந்து நீக்கவும், பொதுக்குழுவிற்கே அதிகாரம் உண்டு. என்பதால், இந்த மத்திய குழுவில் இந்த விவாதத்தை எடுத்துக்கொள்ள முடியாது என்ற ஒழுங்குப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது.

அதற்கு செயலாளர் நாயகம் "இதை ஆரம்பத்திலேயே எழுப்பியிருக்க வேண்டும்; இடையில் எழுப்ப முடியாது. இதுதான் நாடாளுமன்ற நடைமுறை. வேண்டுமாயின் இதனை வாக்கெடுப்பிற்கு விடலாம்" - என்றும கூறினார்.

இவ்வேளையில் இந்த உறுப்பினர் நாடாளுமன்றத்தில் ஒழுங்குப்பிரச்சினை எடுக்கப்படும்போது வாக்கெடுப்பிற்கு அது விடப்படுவதில்லை, சபாநாயகரின் தீர்ப்பே இறுதியானது. அதுவே மரபும் கூட. ஆகவே, இவ்வொழுங்குப் பிரச்சினைக்குத் தலைவரே தீர்ப்புக்கூற வேண்டும். தலைவரின் தீர்ப்பு என்ன? - என்று வினாவினார். நான் இந்த ஒழுங்குப் பிரச்சினையை ஏற்று, இவ்விவாதத்தை கட்சியின் பொதுச்சபையால மட்டுமே விவாதிக்கலாம் என்ற தீர்ப்பை வழங்கினேன்.

இவ்வேளையில், செயலாளர் நாயகம் சபை மரபிற்கு முரணாக - தலைவர் ஸ்தானத்தை தானாகவே தன்கையில் எடுத்துக்கொண்டு - நம்பிக்கையில்லாப்பிரேரணையைப் பிரேரித்து, அதை அனுமதியுங்கள் என்று கேட்க -

சபையில் ஒரே கூச்சல், குழப்பத்துடன் உறுப்பினர்கள் அனைவரும எழுந்து நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இதனால், என்னால் சபையைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. சபையை காலவரையறையின்றி ஒத்தி வைத்துள்ளேன். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# கூட்டணி அலுவலக.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விந்தனின் சிபார்சில் மாநகர சபையில் பணி நியமனம் பெற்றுக்கொடுத்த மற்றும் சிலர் ஆகியோர் இவ்வாறு தன்னைத் தாக்க முயன்றனர் என்றார் ரவிராஜ் எம்.பி.

ஆனந்தசங்கரிக்கு ஆதரவான கும்பல் ஒன்று முன்னரே திட்டமிடப்பட்டு கட்சிக் காரியாலய வாசலில் திரட்டி நிறுத்தப்பட்டிருந்தது. அவர்களே காடைத்தனத்துக்குப் பின்புலமாக நின்றனர் என்றார் ரவிராஜ்.

இதற்கிடையில் வவுனியா மாவட்டக் கிளைக் கூட்டத்தில் ஆனந்த சங்கரிக்கு ஆதரவாகச் செயற்பட்ட பின்னர், நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் அவருக்கு எதிராக வாக்களித்தார் என்று கூறப்படும் - தமிழர் விடுதலைக் கூட்டணியின் கடந்த பொதுத்தேர்தல் வவுனியா வேட்பாளரான - குலதேவராஜா என்பவரும் இக் கும்பலினால் காரியாலய வாசலில் வைத்துத் தாக்கப்பட்டார் எனத் தெரிகின்றது. இந்தக் களேபரத்தின்போது கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் கீழ்த தரமான வார்த்தைப் பிரயோகங்களும் தாராளமாக இடம்பெற்றன.

கூட்டணி எம்.பி.க்களுக்குப் பாதுகாப்பாக - மெய்ப்பாதுகாவலர்களாக - கணிசமான பொலஸார் அங்கு வந்திருந்தமையாலும், மேலும் சில பொலீஸார் அப்பகுதியில் கடமையில் இருந்ததாலும் இந்தக் களேபரம் பெரும் மோதலாக வெடிக்காமல் தவிர்க்கப்பட்டது என்றார் கூட்டணியின் மூத்த உறுப்பினர் ஒருவர்.

மத்திய குழுக்கூட்டம் முடிந்து சுமார் ஒரு மணி நேரம் கட்சி அலுவலகத்தை அண்டிய பிரதேசம் பெரும் கூச்சல், குழப்பம், பதற்றத்துடன் காணப்பட்டது. (ஐ)


C.C.A
K.K.S.வீதி, சுன்னாகம்.
2004
கல்வியாண்டு
தரம் 6 முதல் 11வரை
வகுப்புக்கள்
ஆரம்பம்-03-12-2003
மாலை3.00p.m.
பிரபல ஆசிரியர் ஒருங்கிணைந்த சேவை.

ஆரம்பமாகிவிட்டது!
தரம் 5 முதல் O/L வரை
பிரபல கல்லூரி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு விசேட கணித வகுப்பு
திரு.R.S.பவானந்தன்
I.B.S. சுண்டுக்குளி & நல்லூர்.
(36)

THE BARBARA MULVANEY
Computer Training Centre
13, Temple Road, Jaffna.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma in Ms Office (4 Months)
Diploma in Desktop Publishing (4 Months)
Diploma in Photo Graphics (3 Months)
Diploma in Kids Course (1-2 Months)
Certificate of Internet & E-mail (2 Months)
இப் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் 5ம் திகதி ஆரம்பமாக இருப்பதால் உங்கள் பதிவுகளுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்
Internet browsing - 8.00 a.m - 8.00 p.m

மேசைத் தொலைபேசிகள் விற்பனைக்கு
டயலொக், மொபிட்டல், மேசைத் தொலைபேசிகள் STAR MOBILE நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு
24 மணித்தியாலங்களுக்குள் பக்கேஜ் இணைப்புக்கள் வழங்கப்படும்.
கையடக்கத் தொலைபேசிகள் பழுது பார்க்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:
சதீஸ் இலத்திரனியல்
கைதடிச் சந்தி, கைதடி.
(25224)(36-12-17)


## மரண அறிவித்தல்

### நாகமுத்து பரராஜசிங்கம்

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட நாகமுத்து பரராஜசிங்கம் நேற்று (30.11.2003) ஞாயிறு இரவு காலமானார்.

அன்னார் பூமணியின் அன்புக் கணவரும், செந்தில்செல்வன், சூரியகலா, சுதாகரன், கண்ணதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 02.12.2003 செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்..


*கொழும்புத்துறை வீதி,*
*கொழும்புத்துறை.* (25254)(36-12-17-31)

தகவல்:
லயன் செந்தில்செல்வன்,
(மின்சார சபை).


கணக்கீடு
A/L: 2005
உற்பத்திக் கணக்கு
ஆரம்பம் நாளை:12.30
கட்டுப்பாட்டுக் கணக்கு
சனி காலை 6 மணி
ஆசிரியர்: S.தவா
B.Com(Hons)(Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
Jaffna (25273)(36)

ரஷ்யாவில்
மருத்துவக் கல்வி
SECOND BATCH
இரண்டாவது தொகுதி
SMOLENSK STATE
MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE(MD)
MEDICINE-1800 US $
(anuwally)
6 Years (IN ENGLISH)
2003/2004 கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
Admision மற்றும் மேலதிக தகவல்களை விடுமுறையில் இலங்கை வந்துள்ள மருத்துவ மாணவன் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
T.SAYANTHAN
672, K.K.S.ROAD,
Jaffna.
021- 222 2536
011 273 6240
0777 316 273
e.mail: Smolenskmedical@hotmail.com

பாடசாலை விடுமுறைக்கால கணனி வகுப்புக்கள்
காலம் : 1½ மாதம்
விடயம் : Computer Handling. (for School Student).
ஆரம்பம் : 1 - 12 - 2003. திங்கள் காலை 10 மணி.
மேலதிக விபரங்களுக்கு :
73, Palaly Road, Kantharmadam, Jaffna.
T.P - 2222674.
Director :
STP Computer World (pvt) ltd.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.12.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.